# Index


| Sl.No | Date | Particulars | Page |
|---|---|---|---|
| 1. | 29.11.2022 | Copy of JJB, Chengalpattu Summon to Gokulshri | 1 |
| 2. | 31.12.2022 | Copy of FIR 599 of 2022, Chengalpattu Police Station | 2-3 |
| 3. | 02.01.2023 | Death Report of Gokulshri | 4 |
| 4. | 11.01.2023 | Copy of Representation of Mrs.Priya, Mother of Gokulshri to the District Collector, Chengalpattu | 5-12 |
| 5. | 11.01.2023 | Copy of Representation of Mrs.Priya, Mother of Gokulshri to the Superintendent of Police, Chengalpattu with acknowledgement | 13-20 |
| 6. | 11.01.2023 | Copy of Representation of Mrs.Priya, Mother of Gokulshri to Tamilnadu State Human Rights Commission, Chennai | 21-27 |
| 7. | 11.01.2023 | Postal Receipts | 28 |
| 8. | 11.01.2023 | N.Haja, Electrical labour, Children's Home Written statement | 29-32 |
| 9. | 15.01.2023 | Copy of Representation of Mrs.Priya, Mother of Gokulshri to the Inspector of Police, Chengalpattu Town Police Station | 33-34 |
| 10. | 19.01.2023 | Copy of RTI application to Social Welfare Department with postal receipt | 35-39 |
| 11. | 17.01.2023 | Copy of TamilNadu Child Rights Watch (TNCRW) Representation to Tmt.Geetha Jeevan, Hon'ble Minster of Social Welfare and Women Empowerment | 40-43 |
| 12. | 17.01.2023 | Copy of Tour program of NCPCR Inquiry Team | 44-45 |
| 13. | 19.01.2023 | Copy of Transfer order Proceedings of Special Home Staffs by Tmt.S.Valarmathi, I.A.S., Director, Social Welfare Department | 46 |
| 14. | 20.01.2023 | Copy of Representation of Barathi Anna, District Secretary Marxist Communist Party, Chengalpattu to District Collector Chengalpattu | 47-49 |

| Sl.No | Date | Particulars | Page |
|---|---|---|---|
| 15. | 21.01.2023 | Copy of Transfer order Proceedings of Special Home Staffs by Tmt.S.Valarmathi, I.A.S., Director, Social Welfare Department | 50-55 |
| 16. | 02.02.2023 | Copy of Social Welfare Department Enquiry Summon | 56 |
| 17. | 03.02.2023 | Copy of G.O. Rt.No.411 of Public (Special A) Department Regarding IAS Officers Transfer | 57 |
| 18. | 03.03.2023 | Copy of Hon'ble Madurai Bench of Madras High Court Order in W.P.(MD) No.122608 of 2020 and W.P.(MD) No.12224 and 12225 of 2020 Santhosh vs The District Collector and 9 others | 58-71 |
| 19. | 08.03.2023 | Copy of RTI reply from Social Welfare Department | 72 |
| 20. | 17.03.2023 | Copy of RTI Reply from Dr.Manigandaraj, Associate Professor, Govt. Medical College, Chengalpattu | 73-74 |
| 21. | 24.03.2023 | Copy of RTI Reply from Social Welfare Department | 75 |
| 22. | 27.03.2023 | Copy of Proceedings of Thiru.Amar Gushwaga IAS, regarding Transfer of Special Home Staffs | 76-77 |
| 23. | 27.03.2023 | Copy of RTI Reply from Principal Office of Chengalpattu Medical College | 78 |
| 24. | 11.04.2023 | Copy of G.O.(MS) No. 22 of Social Welfare and Women Empowerment [SW8(1)] Department | 79-80 |
| 25. | | Copy News Clippings from various News magazines | 81-122 |
| 26. | | Photos | 123 |

The Second Schedule
(See Section 476)

C.C.NO 281/2022
RPT / TBN

FORM No.1
SUMMONS TO AN JUVENILE
(See Section 61)

To P. Gokulshri
S/o. Late, Palani
Kannadapalayam Tambaram

Whereas your attendance is necessary to answer to a charge of (State Shortly the offence charged), you are hereby required to appear in person (or by pleader as the case may be) before the (Magistrate) of JJB on the 23 day of Dec 2022. Herein fail not.

H/S: 23.12.2022.

Dated, this 29 day of Nov 2022

S. Lakshmi

Juvenile Justice Board, 29.11.2022
Chengalpattu

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

1. District: CHENGALPATTU P.S. CHENGALPATTU TOWN Year 2022 FIR No. 599 Date: 31-12-2022
மாவட்டம் காவல் நிலையம் ஆண்டு மு. த.அ.எண் நாள்

2. Act(s) சட்டம்
CODE OF CRIMINAL PROCEDURE, 1973
Sections பிரிவுகள்
176(1A)(i)

3. (a) Occurrence of Offence Day: SATURDAY Date From: 31-12-2022 Date To: -
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period: On Time From: 16:00 Hrs Time To: -
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information received at PS. Date: 31-12-2022 Time: 19:00 Hrs (c) General Diary Reference: Entry No(s)
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம் பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்

4. Type of Information: WRITTEN Time : -
தகவலின் வகை நேரம்

5. Place of Occurrence: (a) Direction and Distance from PS: NORTH-EAST & 1.0 Km Beat Number: BEAT 4
குற்ற நிகழ்விடம் (அ) காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் முறைக் காவல் எண்
(b) Address: செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் செங்கல்பட்டு
முகவரி
(c) In case, outside limit of this Police Station,then the Name of P.S: - District: -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின் அந்நிலையில், அந்த கா.நி பெயர் மாவட்டம்

6. Complainant/Informant (a) Name: MOHAN S (c) Date/Year of Birth: 1992 (d) Nationality: INDIA
குற்றமுறையீட்டாளர் / தகவல் தந்தவர் பெயர் நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம்
(b).Father's/Husband's Name: SAMBATH
தந்தை / கணவர் பெயர்
(e).Passport No. Date of Issue: Place of Issue:
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f). Occupation: -
தொழில்
(g). Address: SUPERINTENDENT, GOVERMENT CHILDREN SPECIAL HOME, CHENGAL PATTU
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்.

8. Reasons for delay in reporting by the complainant/Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்.

9. Particulars of the properties stolen/Involved:
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம்.

10. Total value of properties stolen/Involved:
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report/ Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம்

பணிந்தனுப்பப்படுகிறது:- இன்று 31.12.2022 ம் தேதி 19.00 மணிக்கு டி1 செங்கல்பட்டு நகர காவல் நிலைய உதவி ஆய்வாளராகிய நான் நிலைய ஆஜரில் இருந்த போது திரு.ச.மோகன் வ/30 த/பெ.சம்பத் கண்காணிப்பாளர் அரசினர் சிறப்பு இல்லம் செங்கல்பட்டு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரில் அய்யா பொருள் அரசினர் கூர்நோக்கு இல்லம் செங்கல்பட்டில் அனுமதிக்கப்பட்ட சிறார் கோகுல்ஸ்ரீ த/பெ.பழனி என்பவர் உடல்நலம் குன்றி இறந்தது- தொடர்பாக. நான் செங்கல்பட்டு அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நேற்று 30.12.2022ம்தேதி தாம்பரம்ரயில்வே காவல் (RPF) நிலைய குற்ற எண்.12/2022 சட்டப்பிரிவு 3(a) RPUP Act- வழக்கில் தொடர்புடைய இளஞ்சிறார் கோகுல்ஸ்ரீ (17) எங்களது கூர்நோக்கு இல்லத்தில் கொண்டு வந்து சேர்த்தனர். மேற்படி சிறார் ஏற்கனவே இதே இல்லத்தில் வேறொரு வழக்கு தொடர்பாக சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு வலிப்பு நோய் இருப்பது தெரியும். இன்று 31.12.2022ம்தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் உடல்நலம் சரியில்லாமல் இல்லத்தில் படுத்து கொண்டு இருந்தவருக்கு வலிப்பு நோய் வந்து மிகவும் அவதிப்பட்டதால் நான் எங்களது கூர்நோக்கு இல்லத்தில் பணிபுரியும் MNA நந்தகோபால் மற்றும் இரண்டாம் நிலை வார்டர் சரண்ராஜ் மூலம் செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனைக்கு மாலை 4.20 மணியளவில் அழைத்து சென்றபோது அங்கு பரிசோதனை செய்த அரசு மருத்துவர் மேற்படி சிறார் கோகுல்ஸ்ரீ ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர் இந்த தகவலை எனது உயர் அலுவலருக்கு தெரிவித்தும் சிறாரின் தாயார் திருமதி.பிரியா என்பவருக்கும் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள SD xxxx மோகன்.

அம்மையீர், மேற்படி புகார் மனுவை இன்று 31.12.2022 ம் தேதி19.00 மணிக்கு பெற்று டி1 செங்கல்பட்டு நகர காவல் நிலைய குற்ற எண்: 599/2022 U/S 176 (1A) (I) Cr.PC யில் வழக்கு பதிவு செய்து இதன் முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1, செங்கல்பட்டு அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் இவ்வழக்கின் மேல்நடவடிக்கைக்காக கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்து காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

13. Action Taken: Since the above report reveals Commission of Offence(s) u/s as mentioned in item No.2, registered case and took up the investigation.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2 -ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

FIR read over to the Complainant/Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant/Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant/Informant

குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station

காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 31-12-2022

நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: NATARAJAN E

பெயர்

Rank: SUB INSPECTOR OF POLICE No.

நிலை எண்

This is an Authentic copy of System Genrated FIR downloaded from TN Police Website (www.eservices.tnpolice.gov.in)

on 23/1/2023 at 3:15:13 pm

## DEATH REPORT

Chengalpattu Town Police Station Cr.No.599/2022

| | | |
|---|---|---|
| 1 | Name in Full | P. Gokul sri |
| 2 | Father Name | Palani |
| 3 | Sex | Male |
| 4 | Nationality / Caste | B.C. Panikkar |
| 5 | Age | 17 Years. |
| 6 | Date of Death | 31.12.2022 |
| 7 | Duration of Decease | — |
| 8 | Usual Residence | kuppamedu, Kannadapalayam Tambaram. |
| 9 | Place of Death | on the way to chengalpet Gr-H from Juvenile Home chengalpet |
| 10 | Social Condition | poor |
| 11 | Occupation | Daily labour. |
| 12 | Corpse to be Buried (or) Burnt | Burnt |
| 13 | Name of Burial ground | Pazhaveli, chengalpet |

since she has no source to do the funeral ceremonies and hence helped by the police officials.

Sir,

I request that the body of the above deceased may kindly be handed over to HC, 192, Parguran of Chengalpattu Town Police Station after Post Mortem.

POSTMORTEM COMPLETED
P.M. No: 18/23 Date: 3/1/23

Preena
02/01/2023
3.10 pm.
Judicial Magistrate No.I,
Chengalpattu.

02/01/2023

Dr. G. MANIGANDARAJ, MBBS,MD.,
Reg.No: 91805
Associate Professor
Department Of Forensic Medicine & Toxicology
Government Chengalpattu Medical
College & Hospital
Chengalpattu - 603 001.

பிரேத பரிசோதனை முடிந்து
அடையாளம் சரிபார்த்து பிரேதத்தை
பெற்றுக்கொண்டேன்.

11.01.2023

அனுப்புநர்

பிரியா (37)
க/பெ. பழனி (லேட்)
குப்பைமேடு,
சாந்தி அப்பார்ட்மெண்ட் அருகில்,
கன்னடப்பாளையம் மேற்கு,
சாந்தி அடுக்குமாடி குடியிருப்பு அருகில்
தாம்பரம் - 600 045

பெறுநர்

உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
GST ரோடு,
செங்கல்பட்டு மாவட்டம்,
செங்கல்பட்டு – 603 001

வணக்கம்!

**பொருள்: செங்கல்பட்டு, சிறுவர் சீர்நோக்கு இல்லத்தில், எனது 17 வயது மகனை அடித்து சித்திரவதை செய்து, கொடுங்காயங்கள் ஏற்படுத்தி கொலை செய்தவர்கள் மீது நடவடிக்கை கோரி**

எனது பெயர் பிரியா (37). க/பெ பழனி. நான் இல்லத்துப் பிள்ளைமார் சமூகத்தை சேர்ந்தவள். நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கும் எனது கணவருக்கும் 21.02.2005 அன்று திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தனர். அதில் மூத்த மகன் பெயர் கோகுல்ஸ்ரீ (17), 10-ஆம் வகுப்பு படித்துள்ளான் (காவல் விசாரணையில் இறந்த நபர்). இரண்டாவது மகன் பெயர் விஷ்ணுவரதன் (14) 9-ஆம் வகுப்பு படித்து வருகிறான். மூன்றாவது மகன் ஸ்ரீராம் (13) 8-ஆம் வகுப்பு படித்து வருகிறான். நான்காவது மகள் வைஷ்ணவி (11) 6-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். ஐந்தாவது மகள் பானுமதி (8) 3-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். ஆறாவது மகள் பவானி (4½) பள்ளிக்கு செல்லவில்லை. எனது கணவர் உடல் நிலை சரியில்லாமல் 05.12.2019 அன்று இறந்து விட்டார்.

நான் தண்ணீர் லோடு ஏற்றும் லாரிகளை பார்த்துக் கொள்ளும் வாட்ச்வுமன் பணி செய்து வருகிறேன். அதில் கிடைக்கும் சிறு வருவாயில் எனது

குழந்தைகளை வளர்த்து வருகிறேன். எனக்கு சொந்தமாக வீடு எதுவும் இல்லை. கன்னடப்பாளையம் அருகில் உள்ள குப்பை மேட்டு அருகில் உள்ள லாரி செட்டில் தான் குழந்தைகளோடு வாழ்ந்து வருகிறேன்.

எனது மகன் கோகுல்ஸ்ரீயை பள்ளிக்கு அனுப்ப முடியாத நிலையில், குன்றத்தூர் பஸ்டாண்டு அருகாமையில் இருந்த பொம்மைக் கடையில் வேலைக்கு சேர்த்து விட்டேன். வேலை முடிந்த பின்பு பெரும்பாலும் கடை உரிமையாளர் வீட்டிலே இருந்து கொள்வான். இந்நிலையில் என் மகன், அவனது நண்பனை பார்க்க பொத்தேரிக்கு 28.12.2022 அன்று சென்றான். அதன் பின்பு 29.12.2022 அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் பொத்தேரியில் இருந்து இரயில் ஏறி தாம்பரம் இரயில் நிலையம் வந்துள்ளான். அப்போது அங்கிருந்த இரயில்வே போலீசார் என் மகனை சந்தேகத்தின் பெயரில் பிடித்துள்ளனர்.

அடுத்த நாள் 30.12.2022 அன்று காலை சுமார் 10.00 மணி அளவில், ஏட்டையா பாலு என்பவர் 87544 91899 என்ற செல் நம்பரிலிருந்து எனது செல் நம்பர் 98842 47517 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு என் மகனை பிடித்து வைத்திருப்பதாகவும் உடனே காவல் நிலையம் வரவும் எனக் கூறினார். நான் வேலை செய்யும் இடத்தில் ஓனர் தாமதமாக வந்ததால் அவரிடம் சொல்லிவிட்டு மதியம் சுமார் 01.00 மணியளவில் தாம்பரம் இரயில்வே காவல் நிலையத்திற்கு சென்றேன்.

நான் காவல் நிலையம் சென்றவுடன் அங்கிருந்த போலீசார் ஒருவர் என்னை விசாரித்து என் மகன் இருந்த அறைக்கு என்னை அனுப்பி வைத்தார். என்னை பார்த்த எனதுமகன் என் அருகாமையில் வந்து முத்தம் கொடுத்தான். அதன் பின்பு என்னை எப்படியாவது பெயில் எடுத்து விடு! இனிமேல் நீ சொல்வதை கேட்பேன் என்று சொன்னான். நானும் பொங்கல் முடிந்தவுடன் பெயில் எடுத்து விடுகிறேன் என்று தெரிவித்தேன். சுமார் 1½ மணி நேரம் என் மகனோடு பேசிக் கொண்டிருந்தேன். அப்போது என் மகனை இரயில்வே போலீஸ் அடித்ததாக எந்த தகவலும் எனக்கு சொல்லவில்லை. மேலும் என் மகன் உடம்பில் எந்தக் காயமும் இல்லை. மதியம் 2.30 மணிக்கு என் மகன் மற்றும் அங்கிருந்த போலீசாரிடம் தெரிவித்து விட்டு வீட்டிற்கு கிளம்பி விட்டேன்.

30.12.2022 அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் தாம்பரம் இரயில்வே போலீஸ் ஏட்டு பாலு என்பவர் செல் நம்பரில் இருந்து எனக்கு போன் வந்தது. அப்போது என் மகன் கோகுல்ஸ்ரீ என்னிடம் மதியம் என்னை பார்த்து விட்டு சோப்பு பிரஸ் எதுவும் வாங்கித் தரவில்லை ஆனால் ஏட்டையாதான் எனக்கு தோசை எல்லாம் வாங்கிக் கொடுத்தார் விரைவில் வந்து என்னை பார் எனக்கு

எந்தப் பிரச்சனையும் இல்லை என்று கூறினான். அப்போது நான் விரைவில் உன்னை பெயில் எடுத்து விடுவேன் என்று கூறினேன்.

31.12.2022 அன்று சுமார் மாலை 5.30 மணியளவில் 90944 66929 என்ற செல் நம்பரில் இருந்து எனது செல் நம்பருக்கு 98842 47517 கூப்பிட்ட நபர், நான் செங்கல்பட்டு ஹோம் வார்டு பேசுகிறேன். உன் மகன் பூரி, சாப்பிட்டதாலும் மோர் குடித்ததால் ஒரு மாதிரி இழுத்துக் கொண்டே வலுப்பு வந்துவிட்டது. அதனால் நாங்க டூவீலரில் கூப்பிட்டுக் கொண்டு சென்று செங்கல்பட்டு GH-ல் சேர்த்துள்ளோம். எனவே உடனே கிளம்பிவா! என்று சொன்னார். தகவல் கிடைத்தவுடன் நான் பதறியடித்து சேலையைக் கட்டிக் கொண்டு கிளம்பினேன். சுமார் பத்து நிமிடத்திற்குள் நான் பஸ் ஸ்டாப்க்கு செல்வதற்குள், மீண்டும் அதே நம்பரில் இருந்து போன் வந்தது அப்போது ஏற்கனவே பேசிய அதே நபர் உன் மகனை எமர்ஜென்சி வார்டில் சேர்த்துள்ளோம். அதனால் அரை மணி நேரத்தில் வந்துவிடு என்றார். மீண்டும் 10 நிமிடம் கழித்து, ஏற்கனவே கூப்பிட்ட நபர் என்னைத் தொடர்பு கொண்டு உன் மகன் இறந்து விட்டான் என்று தெரிவித்தார். இதனால் நான் பயந்து கொண்டு இரவு சுமார் 8.00 மணியளவில் செங்கல்பட்டு GH- க்கு போய் சேர்ந்தேன்.

மருத்துவமனையில் கேட்டில் இருந்த நபர் என்னை உள்ளவே விடவில்லை. சிறிது நேரத்தில், செங்கல்பட்டு சீர்திருத்த இல்லத்தில் வாசல் கேட்டில் மனு வாங்கி பெற்றோர்களை அனுமதிக்க கூடிய நபர் உள்ளே இருந்து வெளியே வந்தார். அந்த நபர் பார்ப்பதற்க்கு திடமா இருப்பார் பெயர் தெரியாது. ஆனால் பார்த்தால் அடையாளம் தெரியும். அந்த நபரும், என்னை 90944 66929 என்ற செல் நம்பரில் இருந்து தொடர்பு கொண்ட நபரும் பெயர் தெரியாது பார்த்தால் அடையாளம் தெரியும். இருவரும் என்னை வந்து பார்த்தனர். அப்போது அவர்கள் என்னிடம், உன் மகனை இப்போது பார்க்க முடியாது காலையில் பார்க்கலாம் என்று கூறினார்கள். அதற்கு நான் நான் வீட்டிற்கு சென்று விட்டு காலையில் வருகிறேன் என்று கூறினேன். உடனே செங்கல்பட்டு சீர்திருத்த இல்லத்தில் வாசல் கேட்டில் மனு வாங்கி பெற்றோர்களை அனுமதிக்க கூடிய நபர் என்னிடம், உனக்கு தங்குவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்றார். அதற்கு நான் ஆஸ்பத்திரியிலே தங்கி விடுகிறேன்; வேறு எங்கும் வரவில்லை என்றேன். அப்போது, அந்த நபர் நான் சொல்வதைக்கேள் செங்கல்பட்டு ஆஸ்பத்ரியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை எனக்கூறி, அவரது செல்போனை எடுத்து யாரிடமோ பேசினார். சிறிது நேரத்தில் பைக்கில் வந்த நபர் பார்ப்பதற்கு கருப்பாகவும், கட்டையாகவும்

இருந்தார். அவர் பெயர் ராஜா என மற்றவர்கள் பேசி தெரிந்து கொண்டேன். ராஜா என்ற நபர் என்னை பைக்கில் கூப்பிட்டுக் கொண்டு காலனி குடியிருப்பில் உள்ள செங்கல்பட்டு சிறுவர்கள் சீர்திருத்த இல்லத்தில் பணிபுரியும் சரஸ்வதி என்பவரின் வீட்டிற்கு கொண்டு சென்றார்கள். வீட்டு வாசலுக்கு சென்றதும் நான் ஓவென அழுது கொண்டே இருந்தேன். அதனால் சரஸ்வதி வீட்டில் பிரச்சனை ஏற்பட்டது. உடனே சரஸ்வதி ராஜா என்பவரிடம் இந்தம்மாவை சாந்தி வீட்டிற்கு கூப்பிட்டுவிடு என்று சொன்னார்.

இதனால் ஏற்கெனவே என்னை கூப்பிட்டு வந்த ராஜா என்பவர் மீண்டும் என்னை டூவீலரில் ஏற்றிக் கொண்டு செங்கல்பட்டு நகர் காவல் நிலையத்திற்கு எதிரே செல்லும் மார்க்கெட் ரோடு வழியாக கொண்டு சென்று வலது பக்கம் திரும்பி ஒரு சந்து அருகில் இருந்த ஒரு வீட்டில் என்னை அடைத்து வைத்தார்கள். என்னை அடைத்து வைத்த வீடு செங்கல்பட்டு சீர்திருத்த இல்லத்தில் பணிபுரியும் மற்றொரு நபரான சாந்தி என்பவரின் அக்காள் வீடு என அறிந்து கொண்டேன். அந்த வீட்டின் முன்பு மாடு கட்டப்பட்டு இருந்தது. ஆனால் அவரின் பெயர் தெரியாது பார்த்தால் அடையாளம் தெரியும். என்னை அடைத்து வைத்திருந்த வீட்டை ஒட்டியே சாந்தி வீடும் இருந்தது.

31.12.2022 அன்று இரவு முழுவதும் என்னை யாரிடமும் பேசவிடாமல் என் செல்போனை பறித்து வைத்திருந்தார்கள். அடுத்த நாள் 01.01.2023 அன்றும் யாரிடமும் பேசவிடவில்லை. நான் என் மகன் கோகுல்ஸ்ரீ-யை பார்க்க வேண்டும் என அழுது கொண்டே இருந்தேன். இதனால் மதியம் சுமார் 12.30 மணியளவில் சரஸ்வதி மற்றும் சாந்தி இருவரும் என்னை ஒரு ஆட்டோவில் கூப்பிட்டுக் கொண்டு செங்கல்பட்டு GH வந்தார்கள். அங்கு உள்ள மார்ச்சுவரிக்கு சென்று என் மகன் கோகுல்ஸ்ரீ இறந்த நிலையில், முகம் மேல் பக்கம் பார்க்கப்பட்ட நிலையில் கிடந்தான். வீட்டிலிருந்து வரும்போது போட்டிருந்த முழுக்கை சட்டையில் இருந்தான். இடதுபக்கம் மேல் கண்ணின் நெற்றியிலிருந்து வலதுபக்கம் கண்ணின் கீழ் கன்னம் வரை கொம்பால் அடிக்கப்பட்ட தடம் இருந்தது. நடு மூக்கில் பிளேடால் கீறப்பட்ட ரத்தக்காயம் இருந்தது. வலதுபக்கம் நாடியில் பீளேடால் கீறப்பட்ட காயம் இருந்தது. கீழ் உதடு இரண்டு துண்டாக பிளந்து இருந்தது. வலதுபக்கம், இடது பக்கம் கையில் கம்பி வைத்து அடித்தது போல் காயம் இருந்தது. தோல்பட்டையின் பின்பக்கம் தரையில் இழுத்தால் ஏற்படும் தோல் உறிந்து இருந்தது, மார்பில் கம்பியால் அடித்த காயம் இருந்தது. இதனைப் பார்த்ததும் என் மகனை அடித்து சித்திரவதை செய்து கொலை செய்துள்ளார்கள் என உறுதி செய்து கதறி அழுதேன். சுமார் அரை மணி நேரத்திற்கு பின்பு மீண்டும் என்னை GHல் இருந்து ஏற்கனவே அடைத்து

வைத்திருந்த அறைக்கு கொண்டு வந்து விட்டார்கள். நான் கணவன் இல்லாதவள் எனக்கு எந்த சொந்தமும் இல்லை என்பதனை தெரிந்து கொண்ட இவர்கள் என்னை தொடர்ந்து மிரட்டி கட்டுப்படுத்தி வைத்திருந்தார்கள். என்னால் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்தேன்.

மூன்றாவது நாள் 02.01.2023 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் நான் இருந்த வீட்டிற்கு ஒருநபர் வந்தார். பார்ப்பதற்கு அவர் தலைமுடியை ஏற்றி சீவி இருந்தார். முன்னாடி சிறிது வழுக்கை இருந்தது. மூக்கில் சிறுமச்சம் இருந்தது. நான் பார்த்த நபர் காக்கி பேண்ட் போட்டிருந்தார். பின்பு இவர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் (DCPO) சிவக்குமார் என அறிந்து கொண்டேன். இவர் என்னை நான் இருந்த அறையிலிருந்து வெளியே வரச் சொல்லி, என்னை பார்த்ததும் நீதான் கோகுல்ஸ்ரீ அம்மாவா? என்று கேட்டார். நான், ஆம் என்றேன். எதற்காக கத்தி ஆர்ப்பாட்டம் செய்கிறாய். நீ என்ன செய்து விட முடியும். அரசு எதாவது நிவாரணம் கொடுத்தால் அதனை நான்தான் கொடுக்கணும். என்னை மீறிப் போனால் உன் நாலு பசங்கள் படிக்கிற ஹாஸ்டலுக்கு நான் ரெனிவல் கொடுக்க மாட்டேன். அதனால் உன் பிள்ளைகள் தெருவுக்குதான் வருவார்கள். நான்தான் குழந்தைகளுக்கு மாவட்ட அளவில் பாதுகாப்பு கொடுக்கும் அதிகாரி, NGO அமைப்புகளுக்கு நான் அனுமதி கொடுத்தால்தான் பணம் கிடைக்கும். அதனால் இந்த மாவட்டத்தில் என்னை மீறி உன்னால் ஏதும் செய்ய முடியாது. நான் சொல்வதைக் கேட்டால் உனக்கு அனைத்தும் செய்வேன் என்று கூறினார். அப்போது என் பிள்ளையை அடித்தது யார்? என்று கேட்டேன். அதற்கு நான் அடித்ததாக வைத்துக்கொள்! உன்னால் என்ன செய்யமுடியும்? என்றார். எத்தனையோ குழந்தைகளை அடிக்கிறாங்க, இதுக்கெல்லாம் பதில் சொல்ல முடியுமா? சரி இதை விடு, குழந்தைகளுக்கு உனக்கு தேவையானது எல்லாம் நான் செய்கிறேன். செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லம் கண்காணிப்பாளர் கேட்டுக் கொண்டதன் பேரில், என் தரத்தைக் குறைத்துக் கொண்டு, உன்னிடம் சமரசம் பேச வந்தேன். இல்லை, என்றால் உன்னை மாதிரி, இல்லாத நபரிடமெல்லாம் நான் பேச மாட்டேன் என்று சொல்லி எழுதப்படாத வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து கேட்டார். நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். மேலும் என்னை சமரசம் செய்ய நிர்ப்பந்தம் செய்து கொண்டே இருந்தார். இதனால் இந்த சூழலை பயன்படுத்திக் கொண்டு அந்த இடத்திலிருந்து வேகமாக கிளம்பி ஒரு ஆட்டோ பிடித்துக் கொண்டு கலெக்டர் ஆபிசுக்கு மதியம் சுமார் 1.00 மணிக்கு வந்தடைந்தேன். நான் வேகமாக கிளம்பும்போது பொதுமக்கள் இருந்தால் என்னை தடுக்க முடியவில்லை.

கலெக்டர் ஆபிசில் மனு கொடுக்க வந்தபோது, அங்கிருந்த பெண் ஒருவர் நேரம் முடிந்துவிட்டது; மனு வாங்க முடியாது என்றார். உடனே நான், என்

மனுவை வாங்கவில்லை என்றால், இங்கேயே மருந்தைக் குடித்து, நான் இறந்து விடுவேன் என்றேன். இதனால் அவர் யாருக்கோ போன் செய்தார். அப்போது சிறிது நேரத்தில் DRO அவர்கள் வந்துவிட்டார். DRO அவர்களிடம் நடந்ததையெல்லாம் சொன்னேன். அப்போது காலக்டர் வந்து விட்டார். அவரும் என்னிடம் நடந்ததை எல்லாம் கேட்டுவிட்டு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். அதன்பின் என் பாதுகாப்பிற்காக ஒரு எஸ்.ஐ சாரை அனுப்பி வைத்தார். அவர் என்னை GH-க்கு கூப்பிட்டு வந்தார். GH-ல் உள்ள மார்ச்சுவரியில் மாஜிஸ்ட்ரேட்டும், டாக்டர்கள் சிலரும் இருந்தார்கள். அப்போது, என் மகன் உடலை பார்க்க வேண்டும் என்று சொன்னேன். உடனே அனுமதித்தார்கள்.

நான் இரண்டாவது முறை என் மகனை பார்த்த போது அவன் ஏற்கனவே போட்டிருந்த முழுக்கை சட்டை இப்போது இல்லை. அரைக்கை சட்டை போட்டிருந்தான். உடலை திருப்பி போடச் சொன்னேன். என் மகன் உடலை திருப்பிப் போட்ட பின், அவனது உடலைப் பார்த்தேன். முதுகெல்லாம் கொம்பால் அடித்த காயம் இருந்தது. பெடக்ஸ் முழுவதும் தக்காளி பழம்போல் கன்னிப்போய் இருந்தது. காயத்தையெல்லாம் அங்கிருந்த டாக்டரம்மாவிடம் சொன்னபோது அவர் குறித்துக் கொண்டார். அப்போதே மாஜிஸ்ட்ரேட்டிடம் காயங்களையும் நடந்த விபரங்களையும் சொன்னேன்.

அடுத்த நாள் 03.01.2022 காலை சுமார் 10.30 மணிக்கு நான் செங்கல்பட்டு GH-க்கு சென்றேன். சுமார் 11.30 மணிக்கு என் மகன் உடலை போஸ்ட்மார்ட்டம் செய்தார்கள். மாலை சுமார் 3.00 மணிக்கு முடித்தார்கள். அதன் பின் என் மகன் உடலை எடுத்துச் செல்லச் சொன்னார்கள். அப்போது எனக்கும் ஆதரவு யாரும் இல்லை வசதியும் இல்லை என்றேன். கலெக்டர் ஆபீசை சேர்ந்த ஒருவர்தான் உங்க கணவர் இறந்த பின் என்ன முறையில் காரியம் செய்தீர்கள்? என்றார். அதற்கு நான் உடலை எரித்தோம் என்றேன். அதன்படியே என் மகன் கோகுல்ஸ்ரீ உடலை மாலை 5.00 மணிக்கு செங்கல்பட்டு எரிமேடையில் வைத்து எரித்து இறுதி நிகழ்வு செய்தார்கள். அதன்பின் நான் வீட்டிற்கு வந்து விட்டேன். என் மகனை கொலை செய்து விட்டார்கள். இனிமேல் இது போன்ற குழந்தைகள் பாதிக்கக்கூடாது என்பதற்காக அனாதையான நான் நீதி கேட்டு போராடி வருகிறேன் .

30.12.2022 அன்று இரவு என் மகன் செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த இல்லத்தில் அடைத்த பின்பு இல்ல கண்காணிப்பாளர் மோகன், உதவி கண்காணிப்பாளர் வித்யாசாகர் ஆகியோர் கவனத்திற்கு தெரிந்தே என் மகனை அடித்து சித்திரவதை செய்து கொலை செய்துள்ளார்கள். தலைமைக் காவலர்

மோகன், இரவு காவலர்கள் ஹானஸ்ட்ராஜ் சரண்ராஜ், விஜயக்குமார், சின்னமுத்து ஆகியோர் கூட்டாக இணைந்து, இரும்பு பைப் மற்றும் கொம்பால் இரவு முழுவதும் அடித்து சித்திரவதை செய்ததுதான் என் மகன் கொலை செய்யப்பட்டுள்ளான். மேலும் கொடும் காயம்பட்ட என் மகனை உரிய சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யாமல் கொலைகாரர்களுக்கு சாதகமாக செவிலியர் M.N. நந்தகோபால் செயல்பட்டுள்ளார் என்பதை குழந்தை உரிமைகளுக்காக செயல்படும் அமைப்பின் மூலம் தெரிந்து கொண்டேன்.

என் மகன் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் சாட்சிகளை மறைக்ககவும், அழிக்கவும், என்னை மிரட்டி எதிரிகளை பாதுகாக்கும் நோக்கத்தில், செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்க இல்லத்தில் கடைநிலை பணியாளர்கள், நான் மேலே அடையாளம் காட்டிய நபர்கள், செங்கல்பட்டு மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் (DCPO) சிவகுமார் ஆகியோர் கூட்டாக இணைந்து செயல்பட்டுள்ளனர். எனவே இவர்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க கோருகிறேன். மேலும் என் மகனோடு பல சிறுவர்களை அடித்து சித்திரவதை செய்துள்ளனர் .இதனை உறுதிசெய்ய உடனடியாக நீங்கள் நேரில் சென்று இல்லத்தில் உள்ள சிறுவர்களை நேரில் பார்த்து விசாரித்தால், அவர்களின் உடலில் உள்ள காயங்களை, சித்திரவதையின் அடையாளமாக தெரியும். இதேபோல் தொடர்ந்து சீர்நோக்கு இல்ல கண்காணிப்பாளர் உத்தரவின் பெயரில், காப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் மூலம் சிறுவர் சீர்நோக்கு இல்லத்தில் உள்ள சிறுவர்கள் கொடும் சித்திரவதைக்கு ஆளாகி உள்ளார்கள். எனவே விரைவாக விசாரணை செய்து, கொலை வழக்கு பதிவு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் எதிரிகளால் எனக்கும், எனது குழந்தைகளுக்கும் உரிய பாதுகாப்பு கொடுத்து, எனக்கு நீதியையும் நிவாரணத்தையும் பெற்றுத் தருமாரு கேட்டுக் கொள்கிறேன்

இப்படிக்கு,

ப. பிரியா

(பிரியா)

9884247517

அனுப்புநர்
பிரியா (37)
க/பெ. பழனி (லேட்)
குப்பைமேடு,
சாந்தி அப்பார்ட்மெண்ட் அருகில்,
கன்னடப்பாளையம் மேற்கு,
சாந்தி அடுக்குமாடி குடியிருப்பு அருகில்
தாம்பரம் - 600 045

11.01.2023

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
11 JAN 2023
செங்கல்பட்டு மாவட்டம்

பெறுநர்

உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
GST ரோடு,
செங்கல்பட்டு மாவட்டம்,
செங்கல்பட்டு – 603 001

வணக்கம்!

**பொருள்: செங்கல்பட்டு, சிறுவர் சீர்நோக்கு இல்லத்தில், எனது 17 வயது மகனை அடித்து சித்திரவதை செய்து, கொடுங்காயங்கள் ஏற்படுத்தி கொலை செய்தவர்கள் மீது நடவடிக்கை கோரி**

எனது பெயர் பிரியா (37). க/பெ பழனி. நான் இல்லத்துப் பிள்ளைமார் சமூகத்தை சேர்ந்தவள். நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கும் எனது கணவருக்கும் 21.02.2005 அன்று திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தனர். அதில் மூத்த மகன் பெயர் கோகுல்ஸ்ரீ (17), 10-ஆம் வகுப்பு படித்துள்ளான் (காவல் விசாரணையில் இறந்த நபர்). இரண்டாவது மகன் பெயர் விஷ்ணுவரதன் (14) 9-ஆம் வகுப்பு படித்து வருகிறான். மூன்றாவது மகன் ஸ்ரீராம் (13) 8-ஆம் வகுப்பு படித்து வருகிறான். நான்காவது மகள் வைஷ்ணவி (11) 6-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். ஐந்தாவது மகள் பானுமதி (8) 3-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். ஆறாவது மகள் பவானி (4½) பள்ளிக்கு செல்லவில்லை. எனது கணவர் உடல் நிலை சரியில்லாமல் 05.12.2019 அன்று இறந்து விட்டார்.

நான் தண்ணீர் லோடு ஏற்றும் லாரிகளை பார்த்துக் கொள்ளும் வாட்ச்வுமன் பணி செய்து வருகிறேன். அதில் கிடைக்கும் சிறு வருவாயில் எனது

11.01.2023

அனுப்புநர்

பிரியா (37)
க/பெ. பழனி (லேட்)
குப்பைமேடு,
சாந்தி அப்பார்ட்மெண்ட் அருகில்,
கன்னடப்பாளையம் மேற்கு,
சாந்தி அடுக்குமாடி குடியிருப்பு அருகில்
தாம்பரம் - 600 045

பெறுநர்

உயர்திரு. காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்கள்,
மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்,

வணக்கம்!

**பொருள்: செங்கல்பட்டு, சிறுவர் சீர்நோக்கு இல்லத்தில், எனது 17 வயது மகனை அடித்து சித்திரவதை செய்து, கொடுங்காயங்கள் ஏற்படுத்தி கொலை செய்தவர்கள் மீது நடவடிக்கை கோரி**

எனது பெயர் பிரியா (37). க/பெ பழனி. நான் இல்லத்துப் பிள்ளைமார் சமூகத்தை சேர்ந்தவள். நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கும் எனது கணவருக்கும் 21.02.2005 அன்று திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தனர். அதில் மூத்த மகன் பெயர் கோகுல்ஸ்ரீ (17), 10-ஆம் வகுப்பு படித்துள்ளான் (காவல் விசாரணையில் இறந்த நபர்). இரண்டாவது மகன் பெயர் விஷ்ணுவரதன் (14) 9-ஆம் வகுப்பு படித்து வருகிறான். மூன்றாவது மகன் ஸ்ரீராம் (13) 8-ஆம் வகுப்பு படித்து வருகிறான். நான்காவது மகள் வைஷ்ணவி (11) 6-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். ஐந்தாவது மகள் பானுமதி (8) 3-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். ஆறாவது மகள் பவானி (4½) பள்ளிக்கு செல்லவில்லை. எனது கணவர் உடல் நிலை சரியில்லாமல் 05.12.2019 அன்று இறந்து விட்டார்.

நான் தண்ணீர் லோடு ஏற்றும் லாரிகளை பார்த்துக் கொள்ளும் வாட்ச்வுமன் பணி செய்து வருகிறேன். அதில் கிடைக்கும் சிறு வருவாயில் எனது குழந்தைகளை வளர்த்து வருகிறேன். எனக்கு சொந்தமாக வீடு எதுவும் இல்லை.

கன்னடப்பாளையம் அருகில் உள்ள குப்பை மேட்டு அருகில் உள்ள லாரி செட்டில் தான் குழந்தைகளோடு வாழ்ந்து வருகிறேன்.

எனது மகன் கோகுல்ஸ்ரீயை பள்ளிக்கு அனுப்ப முடியாத நிலையில், குன்றத்தூர் பஸ்டாண்டு அருகாமையில் இருந்த பொம்மைக் கடையில் வேலைக்கு சேர்த்து விட்டேன். வேலை முடிந்த பின்பு பெரும்பாலும் கடை உரிமையாளர் வீட்டிலே இருந்து கொள்வான். இந்நிலையில் என் மகன், அவனது நண்பனை பார்க்க பொத்தேரிக்கு 28.12.2022 அன்று சென்றான். அதன் பின்பு 29.12.2022 அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் பொத்தேரியில் இருந்து இரயில் ஏறி தாம்பரம் இரயில் நிலையம் வந்துள்ளான். அப்போது அங்கிருந்த இரயில்வே போலீசார் என் மகனை சந்தேகத்தின் பெயரில் பிடித்துள்ளனர்.

அடுத்த நாள் 30.12.2022 அன்று காலை சுமார் 10.00 மணி அளவில், ஏட்டையா பாலு என்பவர் 87544 91899 என்ற செல் நம்பரிலிருந்து எனது செல் நம்பர் 98842 47517 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு என் மகனை பிடித்து வைத்திருப்பதாகவும் உடனே காவல் நிலையம் வரவும் எனக் கூறினார். நான் வேலை செய்யும் இடத்தில் ஓனர் தாமதமாக வந்ததால் அவரிடம் சொல்லிவிட்டு மதியம் சுமார் 01.00 மணியளவில் தாம்பரம் இரயில்வே காவல் நிலையத்திற்கு சென்றேன்.

நான் காவல் நிலையம் சென்றவுடன் அங்கிருந்த போலீசார் ஒருவர் என்னை விசாரித்து என் மகன் இருந்த அறைக்கு என்னை அனுப்பி வைத்தார். என்னை பார்த்த எனதுமகன் என் அருகாமையில் வந்து முத்தம் கொடுத்தான். அதன் பின்பு என்னை எப்படியாவது பெயில் எடுத்து விடு! இனிமேல் நீ சொல்வதை கேட்பேன் என்று சொன்னான். நானும் பொங்கல் முடிந்தவுடன் பெயில் எடுத்து விடுகிறேன் என்று தெரிவித்தேன். சுமார் 1½ மணி நேரம் என் மகனோடு பேசிக் கொண்டிருந்தேன். அப்போது என் மகனை இரயில்வே போலீஸ் அடித்ததாக எந்த தகவலும் எனக்கு சொல்லவில்லை. மேலும் என் மகன் உடம்பில் எந்தக் காயமும் இல்லை. மதியம் 2.30 மணிக்கு என் மகன் மற்றும் அங்கிருந்த போலீசாரிடம் தெரிவித்து விட்டு வீட்டிற்கு கிளம்பி விட்டேன்.

30.12.2022 அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் தாம்பரம் இரயில்வே போலீஸ் ஏட்டு பாலு என்பவர் செல் நம்பரில் இருந்து எனக்கு போன் வந்தது. அப்போது என் மகன் கோகுல்ஸ்ரீ என்னிடம் மதியம் என்னை பார்த்து விட்டு சோப்பு பிரஸ் எதுவும் வாங்கித் தரவில்லை ஆனால் ஏட்டையாதான் எனக்கு தோசை எல்லாம் வாங்கிக் கொடுத்தார் விரைவில் வந்து என்னை பார் எனக்கு

எந்தப் பிரச்சனையும் இல்லை என்று கூறினான். அப்போது நான் விரைவில் உன்னை பெயில் எடுத்து விடுவேன் என்று கூறினேன்.

31.12.2022 அன்று சுமார் மாலை 5.30 மணியளவில் 90944 66929 என்ற செல் நம்பரில் இருந்து எனது செல் நம்பருக்கு 98842 47517 கூப்பிட்ட நபர், நான் செங்கல்பட்டு ஹோம் வார்டு பேசுகிறேன். உன் மகன் பூரி, சாப்பிட்டதாலும் மோர் குடித்ததால் ஒரு மாதிரி இழுத்துக் கொண்டே வலுப்பு வந்துவிட்டது. அதனால் நாங்க டூவீலரில் கூப்பிட்டுக் கொண்டு சென்று செங்கல்பட்டு GH-ல் சேர்த்துள்ளோம். எனவே உடனே கிளம்பிவா! என்று சொன்னார். தகவல் கிடைத்தவுடன் நான் பதறியடித்து சேலையைக் கட்டிக் கொண்டு கிளம்பினேன். சுமார் பத்து நிமிடத்திற்குள் நான் பஸ் ஸ்டாப்க்கு செல்வதற்குள், மீண்டும் அதே நம்பரில் இருந்து போன் வந்தது அப்போது ஏற்கனவே பேசிய அதே நபர் உன் மகனை எமர்ஜென்சி வார்டில் சேர்த்துள்ளோம். அதனால் அரை மணி நேரத்தில் வந்துவிடு என்றார். மீண்டும் 10 நிமிடம் கழித்து, ஏற்கனவே கூப்பிட்ட நபர் என்னைத் தொடர்பு கொண்டு உன் மகன் இறந்து விட்டான் என்று தெரிவித்தார். இதனால் நான் பயந்து கொண்டு இரவு சுமார் 8.00 மணியளவில் செங்கல்பட்டு GH- க்கு போய் சேர்ந்தேன்.

மருத்துவமனையில் கேட்டில் இருந்த நபர் என்னை உள்ளவே விடவில்லை. சிறிது நேரத்தில், செங்கல்பட்டு சீர்திருத்த இல்லத்தில் வாசல் கேட்டில் மனு வாங்கி பெற்றோர்களை அனுமதிக்க கூடிய நபர் உள்ளே இருந்து வெளியே வந்தார். அந்த நபர் பார்ப்பதற்க்கு திடமா இருப்பார் பெயர் தெரியாது. ஆனால் பார்த்தால் அடையாளம் தெரியும். அந்த நபரும், என்னை 90944 66929 என்ற செல் நம்பரில் இருந்து தொடர்பு கொண்ட நபரும் பெயர் தெரியாது பார்த்தால் அடையாளம் தெரியும். இருவரும் என்னை வந்து பார்த்தனர். அப்போது அவர்கள் என்னிடம், உன் மகனை இப்போது பார்க்க முடியாது காலையில் பார்க்கலாம் என்று கூறினார்கள். அதற்கு நான் நான் வீட்டிற்கு சென்று விட்டு காலையில் வருகிறேன் என்று கூறினேன். உடனே செங்கல்பட்டு சீர்திருத்த இல்லத்தில் வாசல் கேட்டில் மனு வாங்கி பெற்றோர்களை அனுமதிக்க கூடிய நபர் என்னிடம், உனக்கு தங்குவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்றார். அதற்கு நான் ஆஸ்பத்திரியிலே தங்கி விடுகிறேன்; வேறு எங்கும் வரவில்லை என்றேன். அப்போது, அந்த நபர் நான் சொல்வதைக்கேள் செங்கல்பட்டு ஆஸ்பத்ரியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை எனக்கூறி, அவரது செல்போனை எடுத்து யாரிடமோ பேசினார். சிறிது நேரத்தில் பைக்கில் வந்த நபர் பார்ப்பதற்கு கருப்பாகவும், கட்டையாகவும்

16



இருந்தார். அவர் பெயர் ராஜா என மற்றவர்கள் பேசி தெரிந்து கொண்டேன். ராஜா என்ற நபர் என்னை பைக்கில் கூப்பிட்டுக் கொண்டு காலனி குடியிருப்பில் உள்ள செங்கல்பட்டு சிறுவர்கள் சீர்திருத்த இல்லத்தில் பணிபுரியும் சரஸ்வதி என்பவரின் வீட்டிற்கு கொண்டு சென்றார்கள். வீட்டு வாசலுக்கு சென்றதும் நான் ஓவென அழுது கொண்டே இருந்தேன். அதனால் சரஸ்வதி வீட்டில் பிரச்சனை ஏற்பட்டது. உடனே சரஸ்வதி ராஜா என்பவரிடம் இந்தம்மாவை சாந்தி வீட்டிற்கு கூப்பிட்டுவிடு என்று சொன்னார்.

இதனால் ஏற்கெனவே என்னை கூப்பிட்டு வந்த ராஜா என்பவர் மீண்டும் என்னை டூவீலரில் ஏற்றிக் கொண்டு செங்கல்பட்டு நகர் காவல் நிலையத்திற்கு எதிரே செல்லும் மார்க்கெட் ரோடு வழியாக கொண்டு சென்று வலது பக்கம் திரும்பி ஒரு சந்து அருகில் இருந்த ஒரு வீட்டில் என்னை அடைத்து வைத்தார்கள். என்னை அடைத்து வைத்த வீடு செங்கல்பட்டு சீர்திருத்த இல்லத்தில் பணிபுரியும் மற்றொரு நபரான சாந்தி என்பவரின் அக்காள் வீடு என அறிந்து கொண்டேன். அந்த வீட்டின் முன்பு மாடு கட்டப்பட்டு இருந்தது. ஆனால் அவரின் பெயர் தெரியாது பார்த்தால் அடையாளம் தெரியும். என்னை அடைத்து வைத்திருந்த வீட்டை ஒட்டியே சாந்தி வீடும் இருந்தது.

31.12.2022 அன்று இரவு முழுவதும் என்னை யாரிடமும் பேசவிடாமல் என் செல்போனை பறித்து வைத்திருந்தார்கள். அடுத்த நாள் 01.01.2023 அன்றும் யாரிடமும் பேசவிடவில்லை. நான் என் மகன் கோகுல்ஸ்ரீ-யை பார்க்க வேண்டும் என அழுது கொண்டே இருந்தேன். இதனால் மதியம் சுமார் 12.30 மணியளவில் சரஸ்வதி மற்றும் சாந்தி இருவரும் என்னை ஒரு ஆட்டோவில் கூப்பிட்டுக் கொண்டு செங்கல்பட்டு GH வந்தார்கள். அங்கு உள்ள மார்ச்சுவரிக்கு சென்று என் மகன் கோகுல்ஸ்ரீ இறந்த நிலையில், முகம் மேல் பக்கம் பார்க்கப்பட்ட நிலையில் கிடந்தான். வீட்டிலிருந்து வரும்போது போட்டிருந்த முழுக்கை சட்டையில் இருந்தான். இடதுபக்கம் மேல் கண்ணின் நெற்றியிலிருந்து வலதுபக்கம் கண்ணின் கீழ் கன்னம் வரை கொம்பால் அடிக்கப்பட்ட தடம் இருந்தது. நடு மூக்கில் பிளேடால் கீறப்பட்ட ரத்தக்காயம் இருந்தது. வலதுபக்கம் நாடியில் பிளேடால் கீறப்பட்ட காயம் இருந்தது. கீழ் உதடு இரண்டு துண்டாக பிளந்து இருந்தது. வலதுபக்கம், இடது பக்கம் கையில் கம்பி வைத்து அடித்தது போல் காயம் இருந்தது. தோல்பட்டையின் பின்பக்கம் தரையில் இழுத்தால் ஏற்படும் தோல் உறிந்து இருந்தது, மார்பில் கம்பியால் அடித்த காயம் இருந்தது. இதனைப் பார்த்ததும் என் மகனை அடித்து சித்திரவதை செய்து கொலை செய்துள்ளார்கள் என உறுதி செய்து கதறி அழுதேன். சுமார் அரை மணி நேரத்திற்கு பின்பு மீண்டும் என்னை GHல் இருந்து ஏற்கனவே அடைத்து

வைத்திருந்த அறைக்கு கொண்டு வந்து விட்டார்கள். நான் கணவன் இல்லாதவள் எனக்கு எந்த சொந்தமும் இல்லை என்பதனை தெரிந்து கொண்ட இவர்கள் என்னை தொடர்ந்து மிரட்டி கட்டுப்படுத்தி வைத்திருந்தார்கள். என்னால் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்தேன்.

மூன்றாவது நாள் 02.01.2023 அன்று காலை சுமார் 17.00 மணியளவில் நான் இருந்த வீட்டிற்கு ஒருநபர் வந்தார். பார்ப்பதற்கு அவர் தலைமுடியை ஏற்றி சீவி இருந்தார். முன்னாடி சிறிது வழுக்கை இருந்தது. மூக்கில் சிறுமச்சம் இருந்தது. நான் பார்த்த நபர் காக்கி பேண்ட் போட்டிருந்தார். பின்பு இவர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் (DCPO) சிவக்குமார் என அறிந்து கொண்டேன். இவர் என்னை நான் இருந்த அறையிலிருந்து வெளியே வரச் சொல்லி, என்னை பார்த்ததும் நீதான் கோகுல்ஸ்ரீ அம்மாவா? என்று கேட்டார். நான், ஆம் என்றேன். எதற்காக கத்தி ஆர்ப்பாட்டம் செய்கிறாய். நீ என்ன செய்து விட முடியும். அரசு எதாவது நிவாரணம் கொடுத்தால் அதனை நான்தான் கொடுக்கணும். என்னை மீறிப் போனால் உன் நாலு பசங்கள் படிக்கிற ஹாஸ்டலுக்கு நான் ரெனிவல் கொடுக்க மாட்டேன். அதனால் உன் பிள்ளைகள் தெருவுக்குதான் வருவார்கள். நான்தான் குழந்தைகளுக்கு மாவட்ட அளவில் பாதுகாப்பு கொடுக்கும் அதிகாரி, NGO அமைப்புகளுக்கு நான் அனுமதி கொடுத்தால்தான் பணம் கிடைக்கும். அதனால் இந்த மாவட்டத்தில் என்னை மீறி உன்னால் ஏதும் செய்ய முடியாது. நான் சொல்வதைக் கேட்டால் உனக்கு அனைத்தும் செய்வேன் என்று கூறினார். அப்போது என் பிள்ளையை அடித்தது யார்? என்று கேட்டேன். அதற்கு நான் அடித்ததாக வைத்துக்கொள்! உன்னால் என்ன செய்யமுடியும்? என்றார். எத்தனையோ குழந்தைகளை அடிக்கிறாங்க, இதுக்கெல்லாம் பதில் சொல்ல முடியுமா? சரி இதை விடு, குழந்தைகளுக்கு உனக்கு தேவையானது எல்லாம் நான் செய்கிறேன். செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லம் கண்காணிப்பாளர் கேட்டுக் கொண்டதன் பேரில், என் தரத்தைக் குறைத்துக் கொண்டு, உன்னிடம் சமரசம் பேச வந்தேன். இல்லை, என்றால் உன்னை மாதிரி, இல்லாத நபரிடமெல்லாம் நான் பேச மாட்டேன் என்று சொல்லி எழுதப்படாத வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து கேட்டார். நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். மேலும் என்னை சமரசம் செய்ய நிர்ப்பந்தம் செய்து கொண்டே இருந்தார். இதனால் இந்த சூழலை பயன்படுத்திக் கொண்டு அந்த இடத்திலிருந்து வேகமாக கிளம்பி ஒரு ஆட்டோ பிடித்துக் கொண்டு கலெக்டர் ஆபிசுக்கு மதியம் சுமார் 1.00 மணிக்கு வந்தடைந்தேன். நான் வேகமாக கிளம்பும்போது பொதுமக்கள் இருந்தால் என்னை தடுக்க முடியவில்லை.

கலெக்டர் ஆபிசில் மனு கொடுக்க வந்தபோது, அங்கிருந்த பெண் ஒருவர் நேரம் முடிந்துவிட்டது; மனு வாங்க முடியாது என்றார். உடனே நான், என்

மனுவை வாங்கவில்லை என்றால், இங்கேயே மருந்தைக் குடித்து, நான் இறந்து விடுவேன் என்றேன். இதனால் அவர் யாருக்கோ போன் செய்தார். அப்போது சிறிது நேரத்தில் DRO அவர்கள் வந்துவிட்டார். DRO அவர்களிடம் நடந்ததையெல்லாம் சொன்னேன். அப்போது காலக்டர் வந்து விட்டார். அவரும் என்னிடம் நடந்ததை எல்லாம் கேட்டுவிட்டு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். அதன்பின் என் பாதுகாப்பிற்காக ஒரு எஸ்.ஐ சாரை அனுப்பி வைத்தார். அவர் என்னை GH-க்கு கூப்பிட்டு வந்தார். GH-ல் உள்ள மார்ச்சுவரியில் மாஜிஸ்ட்ரேட்டும், டாக்டர்கள் சிலரும் இருந்தார்கள். அப்போது, என் மகன் உடலை பார்க்க வேண்டும் என்று சொன்னேன். உடனே அனுமதித்தார்கள்.

நான் இரண்டாவது முறை என் மகனை பார்த்த போது அவன் ஏற்கனவே போட்டிருந்த முழுக்கை சட்டை இப்போது இல்லை. அரைக்கை சட்டை போட்டிருந்தான். உடலை திருப்பி போடச் சொன்னேன். என் மகன் உடலை திருப்பிப் போட்ட பின், அவனது உடலைப் பார்த்தேன். முதுகெல்லாம் கொம்பால் அடித்த காயம் இருந்தது. பெடக்ஸ் முழுவதும் தக்காளி பழம்போல் கன்னிப்போய் இருந்தது. காயத்தையெல்லாம் அங்கிருந்த டாக்டரம்மாவிடம் சொன்னபோது அவர் குறித்துக் கொண்டார். அப்போதே மாஜிஸ்ட்ரேட்டிடம் காயங்களையும் நடந்த விபரங்களையும் சொன்னேன்.

அடுத்த நாள் 03.01.2022 காலை சுமார் 10.30 மணிக்கு நான் செங்கல்பட்டு GH-க்கு சென்றேன். சுமார் 11.30 மணிக்கு என் மகன் உடலை போஸ்ட்மார்ட்டம் செய்தார்கள். மாலை சுமார் 3.00 மணிக்கு முடித்தார்கள். அதன் பின் என் மகன் உடலை எடுத்துச் செல்லச் சொன்னார்கள். அப்போது எனக்கும் ஆதரவு யாரும் இல்லை வசதியும் இல்லை என்றேன். கலெக்டர் ஆபீசை சேர்ந்த ஒருவர்தான் உங்க கணவர் இறந்த பின் என்ன முறையில் காரியம் செய்தீர்கள்? என்றார். அதற்கு நான் உடலை எரித்தோம் என்றேன். அதன்படியே என் மகன் கோகுல்ஸ்ரீ உடலை மாலை 5.00 மணிக்கு செங்கல்பட்டு எரிமேடையில் வைத்து எரித்து இறுதி நிகழ்வு செய்தார்கள். அதன்பின் நான் வீட்டிற்கு வந்து விட்டேன். என் மகனை கொலை செய்து விட்டார்கள். இனிமேல் இது போன்ற குழந்தைகள் பாதிக்கக்கூடாது என்பதற்காக அனாதையான நான் நீதி கேட்டு போராடி வருகிறேன் .

30.12.2022 அன்று இரவு என் மகன் செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த இல்லத்தில் அடைத்த பின்பு இல்ல கண்காணிப்பாளர் மோகன், உதவி கண்காணிப்பாளர் வித்யாசாகர் ஆகியோர் கவனத்திற்கு தெரிந்தே என் மகனை அடித்து சித்திரவதை செய்து கொலை செய்துள்ளார்கள். தலைமைக் காவலர்

மோகன், இரவு காவலர்கள் ஹானஸ்ட்ராஜ் சரண்ராஜ், விஜயக்குமார், சின்னமுத்து ஆகியோர் கூட்டாக இணைந்து, இரும்பு பைப் மற்றும் கொம்பால் இரவு முழுவதும் அடித்து சித்திரவதை செய்ததுதான் என் மகன் கொலை செய்யப்பட்டுள்ளான். மேலும் கொடும் காயம்பட்ட என் மகனை உரிய சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யாமல் கொலைகாரர்களுக்கு சாதகமாக செவிலியர் M.N. நந்தகோபால் செயல்பட்டுள்ளார் என்பதை குழந்தை உரிமைகளுக்காக செயல்படும் அமைப்பின் மூலம் தெரிந்து கொண்டேன்.

என் மகன் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் சாட்சிகளை மறைக்ககவும், அழிக்கவும், என்னை மிரட்டி எதிரிகளை பாதுகாக்கும் நோக்கத்தில், செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்க இல்லத்தில் கடைநிலை பணியாளர்கள், நான் மேலே அடையாளம் காட்டிய நபர்கள், செங்கல்பட்டு மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் (DCPO) சிவகுமார் ஆகியோர் கூட்டாக இணைந்து செயல்பட்டுள்ளனர். எனவே இவர்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க கோருகிறேன். மேலும் என் மகனோடு பல சிறுவர்களை அடித்து சித்திரவதை செய்துள்ளனர் .இதனை உறுதிசெய்ய உடனடியாக நீங்கள் நேரில் சென்று இல்லத்தில் உள்ள சிறுவர்களை நேரில் பார்த்து விசாரித்தால், அவர்களின் உடலில் உள்ள காயங்களை, சித்திரவதையின் அடையாளமாக தெரியும். இதேபோல் தொடர்ந்து சீர்நோக்கு இல்ல கண்காணிப்பாளர் உத்தரவின் பெயரில், காப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் மூலம் சிறுவர் சீர்நோக்கு இல்லத்தில் உள்ள சிறுவர்கள் கொடும் சித்திரவதைக்கு ஆளாகி உள்ளார்கள். எனவே விரைவாக விசாரணை செய்து, கொலை வழக்கு பதிவு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் எதிரிகளால் எனக்கும், எனது குழந்தைகளுக்கும் உரிய பாதுகாப்பு கொடுத்து, எனக்கு நீதியையும் நிவாரணத்தையும் பெற்றுத் தருமாரு கேட்டுக் கொள்கிறேன்

இப்படிக்கு,

ப.பிரியா

(பிரியா)

9884247517

**OFFICE OF THE SUPERINTENDENT OF POLICE,**
**Acknowledgment**

| | | | |
|---|---|---|---|
| 1. | Petitioner Name | : | Priya |
| 2. | Petition No. | : | 10022 |
| 3. | Petition Received Date | : | 11-01-2023 |

for. A. Murugan 11/01/2023

**Office of the Superintendent of Police**
**Chengalpattu District.**

இம்மனு தொடர்பான விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும் : 9894630547 (நேரம் 10.00 AM - 6.00PM)

If you have any clarification please contact Petition Cell No: 9894630547 (Timing 10.00 AM-6.00 PM

11.01.2023

அனுப்புநர்

பிரியா (37)
க/பெ. பழனி (லேட்)
குப்பைமேடு,
சாந்தி அப்பார்ட்மெண்ட் அருகில்,
கன்னடப்பாளையம் மேற்கு,
சாந்தி அடுக்குமாடி குடியிருப்பு அருகில்
தாம்பரம் - 600 045

13.1.2023
SHRC Diary
NO, 682/ CR/2023

பெறுநர்

தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம்,
எண் - 143, குமாரசாமி ராஜா சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028,

வணக்கம்!

**பொருள்: செங்கல்பட்டு, சிறுவர் சீர்நோக்கு இல்லத்தில், எனது 17 வயது மகனை அடித்து சித்திரவதை செய்து, கொடுங்காயங்கள் ஏற்படுத்தி கொலை செய்தவர்கள் மீது நடவடிக்கை கோரி**

எனது பெயர் பிரியா (37). க/பெ பழனி. நான் இல்லத்துப் பிள்ளைமார் சமூகத்தை சேர்ந்தவள். நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கும் எனது கணவருக்கும் 21.02.2005 அன்று திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தனர். அதில் மூத்த மகன் பெயர் கோகுல்ஸ்ரீ (17), 10-ஆம் வகுப்பு படித்துள்ளான் (காவல் விசாரணையில் இறந்த நபர்). இரண்டாவது மகன் பெயர் விஷ்ணுவரதன் (14) 9-ஆம் வகுப்பு படித்து வருகிறான். மூன்றாவது மகன் ஸ்ரீராம் (13) 8-ஆம் வகுப்பு படித்து வருகிறான். நான்காவது மகள் வைஷ்ணவி (11) 6-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். ஐந்தாவது மகள் பானுமதி (8) 3-ஆம் வகுப்பு படித்து வருகிறாள். ஆறாவது மகள் பவானி (4½) பள்ளிக்கு செல்லவில்லை. எனது கணவர் உடல் நிலை சரியில்லாமல் 05.12.2019 அன்று இறந்து விட்டார்.

நான் தண்ணீர் லோடு ஏற்றும் லாரிகளை பார்த்துக் கொள்ளும் வாட்ச்வுமன் பணி செய்து வருகிறேன். அதில் கிடைக்கும் சிறு வருவாயில் எனது

குழந்தைகளை வளர்த்து வருகிறேன். எனக்கு சொந்தமாக வீடு எதுவும் இல்லை. கன்னடப்பாளையம் அருகில் உள்ள குப்பை மேட்டு அருகில் உள்ள லாரி செட்டில் தான் குழந்தைகளோடு வாழ்ந்து வருகிறேன்.

எனது மகன் கோகுல்ஸ்ரீயை பள்ளிக்கு அனுப்ப முடியாத நிலையில், குன்றத்தூர் பஸ்டாண்டு அருகாமையில் இருந்த பொம்மைக் கடையில் வேலைக்கு சேர்த்து விட்டேன். வேலை முடிந்த பின்பு பெரும்பாலும் கடை உரிமையாளர் வீட்டிலே இருந்து கொள்வான். இந்நிலையில் என் மகன், அவனது நண்பனை பார்க்க பொத்தேரிக்கு 28.12.2022 அன்று சென்றான். அதன் பின்பு 29.12.2022 அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் பொத்தேரியில் இருந்து இரயில் ஏறி தாம்பரம் இரயில் நிலையம் வந்துள்ளான். அப்போது அங்கிருந்த இரயில்வே போலீசார் என் மகனை சந்தேகத்தின் பெயரில் பிடித்துள்ளனர்.

அடுத்த நாள் 30.12.2022 அன்று காலை சுமார் 10.00 மணி அளவில், ஏட்டையா பாலு என்பவர் 87544 91899 என்ற செல் நம்பரிலிருந்து எனது செல் நம்பர் 98842 47517 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு என் மகனை பிடித்து வைத்திருப்பதாகவும் உடனே காவல் நிலையம் வரவும் எனக் கூறினார். நான் வேலை செய்யும் இடத்தில் ஓனர் தாமதமாக வந்ததால் அவரிடம் சொல்லிவிட்டு மதியம் சுமார் 01.00 மணியளவில் தாம்பரம் இரயில்வே காவல் நிலையத்திற்கு சென்றேன்.

நான் காவல் நிலையம் சென்றவுடன் அங்கிருந்த போலீசார் ஒருவர் என்னை விசாரித்து என் மகன் இருந்த அறைக்கு என்னை அனுப்பி வைத்தார். என்னை பார்த்த எனதுமகன் என் அருகாமையில் வந்து முத்தம் கொடுத்தான். அதன் பின்பு என்னை எப்படியாவது பெயில் எடுத்து விடு! இனிமேல் நீ சொல்வதை கேட்பேன் என்று சொன்னான். நானும் பொங்கல் முடிந்தவுடன் பெயில் எடுத்து விடுகிறேன் என்று தெரிவித்தேன். சுமார் 1½ மணி நேரம் என் மகனோடு பேசிக் கொண்டிருந்தேன். அப்போது என் மகனை இரயில்வே போலீஸ் அடித்ததாக எந்த தகவலும் எனக்கு சொல்லவில்லை. மேலும் என் மகன் உடம்பில் எந்தக் காயமும் இல்லை. மதியம் 2.30 மணிக்கு என் மகன் மற்றும் அங்கிருந்த போலீசாரிடம் தெரிவித்து விட்டு வீட்டிற்கு கிளம்பி விட்டேன்.

30.12.2022 அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் தாம்பரம் இரயில்வே போலீஸ் ஏட்டு பாலு என்பவர் செல் நம்பரில் இருந்து எனக்கு போன் வந்தது. அப்போது என் மகன் கோகுல்ஸ்ரீ என்னிடம் மதியம் என்னை பார்த்து விட்டு சோப்பு பிரஸ் எதுவும் வாங்கித் தரவில்லை ஆனால் ஏட்டையாதான் எனக்கு தோசை எல்லாம் வாங்கிக் கொடுத்தார் விரைவில் வந்து என்னை பார் எனக்கு

எந்தப் பிரச்சனையும் இல்லை என்று கூறினான். அப்போது நான் விரைவில் உன்னை பெயில் எடுத்து விடுவேன் என்று கூறினேன்.

31.12.2022 அன்று சுமார் மாலை 5.30 மணியளவில் 90944 66929 என்ற செல் நம்பரில் இருந்து எனது செல் நம்பருக்கு 98842 47517 கூப்பிட்ட நபர், நான் செங்கல்பட்டு ஹோம் வார்டு பேசுகிறேன். உன் மகன் பூரி, சாப்பிட்டதாலும் மோர் குடித்ததால் ஒரு மாதிரி இழுத்துக் கொண்டே வலுப்பு வந்துவிட்டது. அதனால் நாங்க டுவீலரில் கூப்பிட்டுக் கொண்டு சென்று செங்கல்பட்டு GH-ல் சேர்த்துள்ளோம். எனவே உடனே கிளம்பிவா! என்று சொன்னார். தகவல் கிடைத்தவுடன் நான் பதறியடித்து சேலையைக் கட்டிக் கொண்டு கிளம்பினேன். சுமார் பத்து நிமிடத்திற்குள் நான் பஸ் ஸ்டாப்க்கு செல்வதற்குள், மீண்டும் அதே நம்பரில் இருந்து போன் வந்தது அப்போது ஏற்கனவே பேசிய அதே நபர் உன் மகனை எமர்ஜென்சி வார்டில் சேர்த்துள்ளோம். அதனால் அரை மணி நேரத்தில் வந்துவிடு என்றார். மீண்டும் 10 நிமிடம் கழித்து, ஏற்கனவே கூப்பிட்ட நபர் என்னைத் தொடர்பு கொண்டு உன் மகன் இறந்து விட்டான் என்று தெரிவித்தார். இதனால் நான் பயந்து கொண்டு இரவு சுமார் 8.00 மணியளவில் செங்கல்பட்டு GH- க்கு போய் சேர்ந்தேன்.

மருத்துவமனையில் கேட்டில் இருந்த நபர் என்னை உள்ளவே விடவில்லை. சிறிது நேரத்தில், செங்கல்பட்டு சீர்திருத்த இல்லத்தில் வாசல் கேட்டில் மனு வாங்கி பெற்றோர்களை அனுமதிக்க கூடிய நபர் உள்ளே இருந்து வெளியே வந்தார். அந்த நபர் பார்ப்பதற்க்கு திடமா இருப்பார் பெயர் தெரியாது. ஆனால் பார்த்தால் அடையாளம் தெரியும். அந்த நபரும், என்னை 90944 66929 என்ற செல் நம்பரில் இருந்து தொடர்பு கொண்ட நபரும் பெயர் தெரியாது பார்த்தால் அடையாளம் தெரியும். இருவரும் என்னை வந்து பார்த்தனர். அப்போது அவர்கள் என்னிடம், உன் மகனை இப்போது பார்க்க முடியாது காலையில் பார்க்கலாம் என்று கூறினார்கள். அதற்கு நான் நான் வீட்டிற்கு சென்று விட்டு காலையில் வருகிறேன் என்று கூறினேன். உடனே செங்கல்பட்டு சீர்திருத்த இல்லத்தில் வாசல் கேட்டில் மனு வாங்கி பெற்றோர்களை அனுமதிக்க கூடிய நபர் என்னிடம், உனக்கு தங்குவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்றார். அதற்கு நான் ஆஸ்பத்திரியிலே தங்கி விடுகிறேன்; வேறு எங்கும் வரவில்லை என்றேன். அப்போது, அந்த நபர் நான் சொல்வதைக்கேள் செங்கல்பட்டு ஆஸ்பத்ரியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை எனக்கூறி, அவரது செல்போனை எடுத்து யாரிடமோ பேசினார். சிறிது நேரத்தில் பைக்கில் வந்த நபர் பார்ப்பதற்கு கருப்பாகவும், கட்டையாகவும்

இருந்தார். அவர் பெயர் ராஜா என மற்றவர்கள் பேசி தெரிந்து கொண்டேன். ராஜா என்ற நபர் என்னை பைக்கில் கூப்பிட்டுக் கொண்டு காலனி குடியிருப்பில் உள்ள செங்கல்பட்டு சிறுவர்கள் சீர்திருத்த இல்லத்தில் பணிபுரியும் சரஸ்வதி என்பவரின் வீட்டிற்கு கொண்டு சென்றார்கள். வீட்டு வாசலுக்கு சென்றதும் நான் ஓவென அழுது கொண்டே இருந்தேன். அதனால் சரஸ்வதி வீட்டில் பிரச்சனை ஏற்பட்டது. உடனே சரஸ்வதி ராஜா என்பவரிடம் இந்தம்மாவை சாந்தி வீட்டிற்கு கூப்பிட்டுவிடு என்று சொன்னார்.

இதனால் ஏற்கெனவே என்னை கூப்பிட்டு வந்த ராஜா என்பவர் மீண்டும் என்னை டூவீலரில் ஏற்றிக் கொண்டு செங்கல்பட்டு நகர் காவல் நிலையத்திற்கு எதிரே செல்லும் மார்க்கெட் ரோடு வழியாக கொண்டு சென்று வலது பக்கம் திரும்பி ஒரு சந்து அருகில் இருந்த ஒரு வீட்டில் என்னை அடைத்து வைத்தார்கள். என்னை அடைத்து வைத்த வீடு செங்கல்பட்டு சீர்திருத்த இல்லத்தில் பணிபுரியும் மற்றொரு நபரான சாந்தி என்பவரின் அக்காள் வீடு என அறிந்து கொண்டேன். அந்த வீட்டின் முன்பு மாடு கட்டப்பட்டு இருந்தது. ஆனால் அவரின் பெயர் தெரியாது பார்த்தால் அடையாளம் தெரியும். என்னை அடைத்து வைத்திருந்த வீட்டை ஒட்டியே சாந்தி வீடும் இருந்தது.

31.12.2022 அன்று இரவு முழுவதும் என்னை யாரிடமும் பேசவிடாமல் என் செல்போனை பறித்து வைத்திருந்தார்கள். அடுத்த நாள் 01.01.2023 அன்றும் யாரிடமும் பேசவிடவில்லை. நான் என் மகன் கோகுல்ஸ்ரீ-யை பார்க்க வேண்டும் என அழுது கொண்டே இருந்தேன். இதனால் மதியம் சுமார் 12.30 மணியளவில் சரஸ்வதி மற்றும் சாந்தி இருவரும் என்னை ஒரு ஆட்டோவில் கூப்பிட்டுக் கொண்டு செங்கல்பட்டு GH வந்தார்கள். அங்கு உள்ள மார்ச்சுவரிக்கு சென்று என் மகன் கோகுல்ஸ்ரீ இறந்த நிலையில், முகம் மேல் பக்கம் பார்க்கப்பட்ட நிலையில் கிடந்தான். வீட்டிலிருந்து வரும்போது போட்டிருந்த முழுக்கை சட்டையில் இருந்தான். இடதுபக்கம் மேல் கண்ணின் நெற்றியிலிருந்து வலதுபக்கம் கண்ணின் கீழ் கன்னம் வரை கொம்பால் அடிக்கப்பட்ட தடம் இருந்தது. நடு மூக்கில் பிளேடால் கீறப்பட்ட ரத்தக்காயம் இருந்தது. வலதுபக்கம் நாடியில் பீளேடால் கீறப்பட்ட காயம் இருந்தது. கீழ் உதடு இரண்டு துண்டாக பிளந்து இருந்தது. வலதுபக்கம், இடது பக்கம் கையில் கம்பி வைத்து அடித்தது போல் காயம் இருந்தது. தோல்பட்டையின் பின்பக்கம் தரையில் இழுத்தால் ஏற்படும் தோல் உறிந்து இருந்தது, மார்பில் கம்பியால் அடித்த காயம் இருந்தது. இதனைப் பார்த்ததும் என் மகனை அடுத்து சித்திரவதை செய்து கொலை செய்துள்ளார்கள் என உறுதி செய்து கதறி அழுதேன். சுமார் அரை மணி நேரத்திற்கு பின்பு மீண்டும் என்னை GHல் இருந்து ஏற்கனவே அடைத்து

வைத்திருந்த அறைக்கு கொண்டு வந்து விட்டார்கள். நான் கணவன் இல்லாதவள் எனக்கு எந்த சொந்தமும் இல்லை என்பதனை தெரிந்து கொண்ட இவர்கள் என்னை தொடர்ந்து மிரட்டி கட்டுப்படுத்தி வைத்திருந்தார்கள். என்னால் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்தேன்.

மூன்றாவது நாள் 02.01.2023 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் நான் இருந்த வீட்டிற்கு ஒருநபர் வந்தார். பார்ப்பதற்கு அவர் தலைமுடியை ஏற்றி சீவி இருந்தார். முன்னாடி சிறிது வழுக்கை இருந்தது. மூக்கில் சிறுமச்சம் இருந்தது. நான் பார்த்த நபர் காக்கி பேண்ட் போட்டிருந்தார். பின்பு இவர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் (DCPO) சிவக்குமார் என அறிந்து கொண்டேன். இவர் என்னை நான் இருந்த அறையிலிருந்து வெளியே வரச் சொல்லி, என்னை பார்த்ததும் நீதான் கோகுல்ஸ்ரீ அம்மாவா? என்று கேட்டார். நான், ஆம் என்றேன். எதற்காக கத்தி ஆர்ப்பாட்டம் செய்கிறாய். நீ என்ன செய்து விட முடியும். அரசு எதாவது நிவாரணம் கொடுத்தால் அதனை நான்தான் கொடுக்கணும். என்னை மீறிப் போனால் உன் நாலு பசங்கள் படிக்கிற ஹாஸ்டலுக்கு நான் ரெனிவல் கொடுக்க மாட்டேன். அதனால் உன் பிள்ளைகள் தெருவுக்குதான் வருவார்கள். நான்தான் குழந்தைகளுக்கு மாவட்ட அளவில் பாதுகாப்பு கொடுக்கும் அதிகாரி, NGO அமைப்புகளுக்கு நான் அனுமதி கொடுத்தால்தான் பணம் கிடைக்கும். அதனால் இந்த மாவட்டத்தில் என்னை மீறி உன்னால் ஏதும் செய்ய முடியாது. நான் சொல்வதைக் கேட்டால் உனக்கு அனைத்தும் செய்வேன் என்று கூறினார். அப்போது என் பிள்ளையை அடித்தது யார்? என்று கேட்டேன். அதற்கு நான் அடித்ததாக வைத்துக்கொள்! உன்னால் என்ன செய்யமுடியும்? என்றார். எத்தனையோ குழந்தைகளை அடிக்கிறாங்க, இதுக்கெல்லாம் பதில் சொல்ல முடியுமா? சரி இதை விடு, குழந்தைகளுக்கு உனக்கு தேவையானது எல்லாம் நான் செய்கிறேன். செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லம் கண்காணிப்பாளர் கேட்டுக் கொண்டதன் பேரில், என் தரத்தைக் குறைத்துக் கொண்டு, உன்னிடம் சமரசம் பேச வந்தேன். இல்லை, என்றால் உன்னை மாதிரி, இல்லாத நபரிடமெல்லாம் நான் பேச மாட்டேன் என்று சொல்லி எழுதப்படாத வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து கேட்டார். நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். மேலும் என்னை சமரசம் செய்ய நிர்ப்பந்தம் செய்து கொண்டே இருந்தார். இதனால் இந்த சூழலை பயன்படுத்திக் கொண்டு அந்த இடத்திலிருந்து வேகமாக கிளம்பி ஒரு ஆட்டோ பிடித்துக் கொண்டு கலெக்டர் ஆபிசுக்கு மதியம் சுமார் 1.00 மணிக்கு வந்தடைந்தேன். நான் வேகமாக கிளம்பும்போது பொதுமக்கள் இருந்தால் என்னை தடுக்க முடியவில்லை.

கலெக்டர் ஆபிசில் மனு கொடுக்க வந்தபோது, அங்கிருந்த பெண் ஒருவர் நேரம் முடிந்துவிட்டது; மனு வாங்க முடியாது என்றார். உடனே நான், என்

மனுவை வாங்கவில்லை என்றால், இங்கேயே மருந்தைக் குடித்து, நான் இறந்து விடுவேன் என்றேன். இதனால் அவர் யாருக்கோ போன் செய்தார். அப்போது சிறிது நேரத்தில் DRO அவர்கள் வந்துவிட்டார். DRO அவர்களிடம் நடந்ததையெல்லாம் சொன்னேன். அப்போது காலக்டர் வந்து விட்டார். அவரும் என்னிடம் நடந்ததை எல்லாம் கேட்டுவிட்டு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். அதன்பின் என் ப்ாதுகாப்பிற்காக ஒரு எஸ்.ஐ சாரை அனுப்பி வைத்தார். அவர் என்னை GH-க்கு கூப்பிட்டு வந்தார். GH-ல் உள்ள மார்ச்சுவரியில் மாஜிஸ்ட்ரேட்டும், டாக்டர்கள் சிலரும் இருந்தார்கள். அப்போது, என் மகன் உடலை பார்க்க வேண்டும் என்று சொன்னேன். உடனே அனுமதித்தார்கள்.

நான் இரண்டாவது முறை என் மகனை பார்த்த போது அவன் ஏற்கனவே போட்டிருந்த முழுக்கை சட்டை இப்போது இல்லை. அரைக்கை சட்டை போட்டிருந்தான். உடலை திருப்பி போடச் சொன்னேன். என் மகன் உடலை திருப்பிப் போட்ட பின், அவனது உடலைப் பார்த்தேன். முதுகெல்லாம் கொம்பால் அடித்த காயம் இருந்தது. பெடக்ஸ் முழுவதும் தக்காளி பழம்போல் கன்னிப்போய் இருந்தது. காயத்தையெல்லாம் அங்கிருந்த டாக்டரம்மாவிடம் சொன்னபோது அவர் குறித்துக் கொண்டார். அப்போதே மாஜிஸ்ட்ரேட்டிடம் காயங்களையும் நடந்த விபரங்களையும் சொன்னேன்.

அடுத்த நாள் 03.01.2022 காலை சுமார் 10.30 மணிக்கு நான் செங்கல்பட்டு GH-க்கு சென்றேன். சுமார் 11.30 மணிக்கு என் மகன் உடலை போஸ்ட்மார்ட்டம் செய்தார்கள். மாலை சுமார் 3.00 மணிக்கு முடித்தார்கள். அதன் பின் என் மகன் உடலை எடுத்துச் செல்லச் சொன்னார்கள். அப்போது எனக்கும் ஆதரவு யாரும் இல்லை வசதியும் இல்லை என்றேன். கலெக்டர் ஆபீசை சேர்ந்த ஒருவர்தான் உங்க கணவர் இறந்த பின் என்ன முறையில் காரியம் செய்தீர்கள்? என்றார். அதற்கு நான் உடலை எரித்தோம் என்றேன். அதன்படியே என் மகன் கோகுல்ஸ்ரீ உடலை மாலை 5.00 மணிக்கு செங்கல்பட்டு எரிமேடையில் வைத்து எரித்து இறுதி நிகழ்வு செய்தார்கள். அதன்பின் நான் வீட்டிற்கு வந்து விட்டேன். என் மகனை கொலை செய்து விட்டார்கள். இனிமேல் இது போன்ற குழந்தைகள் பாதிக்கக்கூடாது என்பதற்காக அனாதையான நான் நீதி கேட்டு போராடி வருகிறேன் .

30.12.2022 அன்று இரவு என் மகன் செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த இல்லத்தில் அடைத்த பின்பு .இல்ல கண்காணிப்பாளர் மோகன், உதவி கண்காணிப்பாளர் வித்யாசாகர் ஆகியோர் கவனத்திற்கு தெரிந்தே என் மகனை அடித்து சித்திரவதை செய்து கொலை செய்துள்ளார்கள். தலைமைக் காவலர்

 27



மோகன், இரவு காவலர்கள் ஹானஸ்ட்ராஜ் சரண்ராஜ், விஜயக்குமார், சின்னமுத்து ஆகியோர் கூட்டாக இணைந்து, இரும்பு பைப் மற்றும் கொம்பால் இரவு முழுவதும் அடித்து சித்திரவதை செய்ததுதான் என் மகன் கொலை செய்யப்பட்டுள்ளான். மேலும் கொடும் காயம்பட்ட என் மகனை உரிய சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யாமல் கொலைகாரர்களுக்கு சாதகமாக செவிலியர் M.N. நந்தகோபால் செயல்பட்டுள்ளார் என்பதை குழந்தை உரிமைகளுக்காக செயல்படும் அமைப்பின் மூலம் தெரிந்து கொண்டேன்.

என் மகன் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் சாட்சிகளை மறைக்ககவும், அழிக்கவும், என்னை மிரட்டி எதிரிகளை பாதுகாக்கும் நோக்கத்தில், செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்க இல்லத்தில் கடைநிலை பணியாளர்கள், நான் மேலே அடையாளம் காட்டிய நபர்கள், செங்கல்பட்டு மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் (DCPO) சிவகுமார் ஆகியோர் கூட்டாக இணைந்து செயல்பட்டுள்ளனர். எனவே இவர்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க கோருகிறேன். மேலும் என் மகனோடு பல சிறுவர்களை அடித்து சித்திரவதை செய்துள்ளனர் .இதனை உறுதிசெய்ய உடனடியாக நீங்கள் நேரில் சென்று இல்லத்தில் உள்ள சிறுவர்களை நேரில் பார்த்து விசாரித்தால், அவர்களின் உடலில் உள்ள காயங்களை, சித்திரவதையின் அடையாளமாக தெரியும். இதேபோல் தொடர்ந்து சீர்நோக்கு இல்ல கண்காணிப்பாளர் உத்தரவின் பெயரில், காப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் மூலம் சிறுவர் சீர்நோக்கு இல்லத்தில் உள்ள சிறுவர்கள் கொடும் சித்திரவதைக்கு ஆளாகி உள்ளார்கள். எனவே விரைவாக விசாரணை செய்து, கொலை வழக்கு பதிவு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் எதிரிகளால் எனக்கும், எனது குழந்தைகளுக்கும் உரிய பாதுகாப்பு கொடுத்து, எனக்கு நீதியையும் நிவாரணத்தையும் பெற்றுத் தருமாரு கேட்டுக் கொள்கிறேன்

இப்படிக்கு,

ப.பிரியா

(பிரியா)

9884247517

28

11.1.2023

भारतीय डाक
India Post

RT606120921IN IVR:8284606120921
RL CHENGALPATTU RMS COUNTER <603001>
Counter No:1,11/01/2023,19:25
To:KAVALA AAIVALAR,CPT
PIN:603001, Chengalpattu HO
From:PRIYA,KUPPAIMEDU GANDH
Wt:25gms
Amt:30.00(Cash)
<Track on www.indiapost.gov.in>
<Dial 18002666868> <Wear Masks, Stay Safe>

भारतीय डाक
India Post

RT606120918IN IVR:8284606120918
RL CHENGALPATTU RMS COUNTER <603001>
Counter No:1,11/01/2023,19:25
To:NEETHITHURAI NADUVAR,CPT
PIN:603111, Venpakkam SO
From:PRIYA,KUPPAIMEDU GANDH
Wt:25gms
Amt:30.00(Cash)
<Track on www.indiapost.gov.in>
<Dial 18002666868> <Wear Masks, Stay Safe>

भारतीय डाक
India Post

RT606120904IN IVR:8284606120904
RL CHENGALPATTU RMS COUNTER <603001>
Counter No:1,11/01/2023,19:25
To:CHIEF MINISTER,CHENNAI
PIN:600009, Fort St George S.O
From:PRIYA,KUPPAIMEDU GANDH
Wt:25gms
Amt:30.00(Cash)
<Track on www.indiapost.gov.in>
<Dial 18002666868> <Wear Masks, Stay Safe>

भारतीय डाक
India Post

RT606120935IN IVR:8284606120935
RL CHENGALPATTU RMS COUNTER <603001>
Counter No:1,11/01/2023,19:25
To:MANILA MANITH,RAJA ANNAMALAIPU
PIN:600028, Raja Annamalaipuram S.O
From:PRIYA,KUPPAIMEDU GANDH
Wt:25gms
Amt:30.00(Cash)
<Track on www.indiapost.gov.in>
<Dial 18002666868> <Wear Masks, Stay Safe>

Rs. 120

11/01/2023

அனுப்புநர்:

N. ஹூரஜா
மின்கம்பியாளர்.
அரசினர் சிறப்பு இல்லம்.
செங்கல்பட்டு.

பெறுநர்: திரு. கண்காணிப்பாளர்.
அரசினர் சிறப்பு இல்லம்.
செங்கல்பட்டு.

ஐயா,

பொருள்: 31/12/2022 (சனி) அன்று உ.நோ.இல்லத்தில் நடந்த உண்மை நிகழ்வை தகவல் தெரிவித்தல் சார்ந்து.

நான் 31/12/2022 [சனிக்கிழமை] அன்று தினசரி நான் வருகின்ற General Shift Duty காலை 10.10 மணிக்கு பணிக்கு வந்தேன்.

நான் மின்கம்பியாளர் அறைக்குச் சென்றேன். அப்போது திரு. ஆனந்த்ராஜ் (முடநீக்குநர்) அவருடைய பணியை (OH Duty) முடித்துவிட்டு வீட்டுக்கு திரும்பும் போது என் அறையின் பக்கம் வந்து என்னிடம் சொன்னார். ஒரு பையன் செல் வந்து இருக்கிறான் அவன்

 30

இரயில் நிலையம் பக்கத்தில் கற்பழிப்பு போன்ற தகாத செயலில் ஈடுபட்டு இருப்பதாக சொன்னார்.

நான் 30 நிமிடங்களுக்கு பிறகு water pump on செய்ய சென்றேன். அப்போது கூர் நோக்கு இல்லத்திற்கு சென்று பார்த்தேன். அனைத்து சிறார்களும் walkway-யில் அமர வைக்கப்பட்டு இருந்தனர். சிறார் கோகுல் என்பவன் மட்டும். வரிசையின் (இரண்டு) பின் மற்றும் மத்தியில் அமர்ந்து இருந்தான். சிலநேரம் கண்கள் மூடி திறந்து கொண்டு இருந்தான். இருப்பு நிலைக்காமல் கீழே விழுந்து படுத்து கொண்டும் இருந்தான். உதவியர் சுரேந்திரன் அழைத்து ஒழுங்காக உட்கார சொன்னார். மற்ற சிறார்கள் இவர் கோகுலை தூக்கி உட்கார வைத்தனர். கோகுல் என்ற சிறுவன் என்னால் முடியவில்லை என்றான். சிறார்கள் இவர் தூக்கி அவனை எதிரில் அமர்த்தனர். பின் பகுதியில் காவலர் உதைத்தனர். முடியவில்லை என்று walkway முன்புற சுவரில் சாய்ந்தான். சுவரில் சாயக்கூடாது என்று அடித்தனர். அப்போது திரு. குணசேகர் என்கிற உதவியர் அன்று இரவில் பணியில் இருந்தான். அவர் அப்போது வந்தார்.

 31

திருவன் கோகுலை முட்டி போட சொல்லி
கொண்டு இருந்தான் அவன் போட முட்டி
போட வில்லை எனவே குணசேகரன் உழியர்
அவரும் திருவனை கால் முட்டி, தொடை பகுதியில்
இரும்பை கொண்டு அடித்தார். அதன் பிறகு
ஒருவர் பின் ஒருவராக மற்ற சிறார்கள்
கோகுலுக்கு பின் அமர்ந்து அடித்து சென்றனர்.
நான் உடனே எழுந்திருச்சி சிறார்களை
கண்டித்தேன். உங்கள் கூட இருக்கும் ஒருவனை
நீங்களே அடிக்கலாமா என்று கேட்டேன்.

? உங்களை மாஸ்டர் அடிக்கச் சொன்னாரா;
Master சொல்லாமல் நீங்கள் ஏன் அடிக்கிறீர்கள்
என்று கேட்டேன். அதன் பிறகு அடிப்பதை
தாங்க முடியாத கோகுல் மற்ற சிறார்களின்
சட்டையை கிழிக்க ஆரம்பித்து விட்டான்.

இதனால் கோபமடைந்த உழியர் திரு-
சரண் வாயை (திருவனின்) பல் மூலம் கட்ட
சொன்னார். வாயை கட்டுவதற்கு திருவன்
ஒத்துக் கொள்ளவில்லை. எனவே 2 மற்றும்
3 சிறார்கள் அவன் காலில் ஏறி மிதித்தனர்.

 32

கை மற்றும் தலையை இரண்டு பேர்
பிடித்துக் கொண்டனர். வாயை (இருவரின்)
டவல் கொண்டு அழுத்தி கட்ட முற்பட்டனர்.
ஏற்றுக்கொள்ளாமல் தடுக்க முயற்சித்தான்.
அப்போது சரண் உடையார் எட்டி உதைத்தார்.
அதன்பிறகு பார்க்க மன வருத்தப்பட்டு
வெளியில் வந்து விட்டேன். பிறகு
என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

இங்ஙனம் உண்மையுள்ள
[illegible]

15.1.2023



அனுப்புநர்:

பிரியா (37) க/பெ பழனி (லேட்)
குப்பைமேடு
சாந்தி அப்பார்ட்மெண்ட் அருகே
கண்ணப்பாளையம் மேற்கு
தாம்பரம் - 600 045

பெறுநர்:

திரு. காவல் ஆய்வாளர் அவர்கள்
செங்கல்பட்டு நகர் காவல் நிலையம்
செங்கல்பட்டு

பொருள்:

செங்கல்பட்டு சிறுவர் சீர்நோக்கு இல்லத்தில், எனது 17 வயது மகன் அதீத சித்திரவதை செய்து, கொடுங்காயம் ஏற்படுத்தி கொலை செய்தவழக்கில் ஆவணங்கள், தடயங்களை அழிக்க திட்டமிட்டதை தடுக்கக்கோரியும், என்னை கடத்தி மிரட்டல் செய்து சாட்சியங்களை மறைக்க திட்டமிட்டு செயல்பட்டவர்களை கைதுசெய்யக்கோரியும் புகார் மனு.

ஐயா/அம்மா வணக்கம்,

நான் மேற்காணும் முகவரியில் வசித்துவருகிறேன். செங்கல்பட்டு சிறுவர் ~~சீர்நோக்கு~~ இல்லத்தில் எனது மகன் கோகுல்ஸ்ரீ (17) என்பவனை இல்லக்காப்பாளர்கள் கொலைசெய்தவழக்கில் உடனடியாக இணைத்து குற்றம்சாட்டப்பட்டவர்களை வழக்குபதிவு செய்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட வழக்கில் 31.12.2023 அன்று [illegible] இரவு சுமார் 8.00 மணியளவில் நான் செங்கல்பட்டு என் மகனை பார்ப்பதற்காக சிறுவர் சீர்நோக்கு இல்லத்தின் பணியாளர்களும் காத்திருந்தபோது, இரண்டு பெயர்தெரியாத பார்த்தால் அடையாளம் தெரியும்

 34

என்னை மருத்துவமனையிலிருந்து மீட்டு, கடத்தி,
அடைத்து வைப்பதற்காக குமாரின், சிறுவர் சீர்நோக்கு
இல்லத்தில் பணிபுரியும் சரஸ்வதி என்பவர் வீட்டிலும்
அரண்மனைப்பு சாந்தி என்பவரின் அக்காள் வீட்டிலும்
அடைத்து வைத்து மிரட்டினார்கள். மேலும் 1.1.2023
காலையிலும், 2.1.2023, காலையிலும் மாவட்ட
குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் சிவக்குமார் என்பவர்
என்னிடம் வந்து வழக்கை வாபஸ்பெற வைக்கும்
நோக்கத்தில் என்னை மிரட்டி பயமுறுத்தினார் எனவே
இவர்மீதும், இதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீதும்
நடவடிக்கை எடுக்க 11.1.2023 அன்று உங்களிடம்
ஏற்கனவே புகார் கொடுத்திருந்தேன். அதன்பேரின்
அவ்வழியாக நடவடிக்கை எடுக்க கோருகிறேன்.

மேலும் என்மகளை சிறுவர் சீர்நோக்கு இல்லத்தில்
வைத்து சித்திரவதை தொலைபேசிய பயன்படுத்திய
ஆவணங்களை அழிக்க திட்டமிட்டு செயல்பட்டு
வருகிறார்கள் எனவே, ஆவணங்களை கைப்பற்ற
விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோருகிறேன்
என்மகள் கொலை வழக்கை நீர்த்துபோக செய்து
குற்றம்சாட்டப்பட்டவர்களை காப்பாற்ற உதவுகிற
துறையின் உயர்மட்ட அலுவலர்கள் முயற்சித்து வருகிறார்கள்
எனவே இந்த கொலை வழக்கினை விசாரிக்க
CPCID (சிறப்புக்கு) சுதந்திர விசாரணை செய்ய பரிந்துரை செய்து
நடவடிக்கை எடுக்கவேண்டுமென தாழ்மையுடன்
கோருகின்றேன்

A. Bharat
காவல் துணை கண்காணிப்பாளர்
செங்கல்பட்டு உட்கோட்டம்
செங்கல்பட்டு மாவட்டம்

இப்படிக்கு
ப.பிரியா
9884247514

 35

## தகவல்உரிமைசட்டம் 2005 பிரிவு 7(1)
## அடிப்படையில்தகவல்கோரும்அவசரமனு




அனுப்புநர்:-

ப. பிரியா
க/பெ. பழனி (லேட்)
குப்பைமேடு, சாந்தி அப்பார்ட்மெண்ட் அருகில்,
கன்னடப்பாளையம்மேற்கு,
தாம்பரம் - 600 045
காஞ்சிபுரம் மாவட்டம்

பெறுநர்:-

பொது தகவல் அலுவலர்
சமூகப் பாதுகாப்புத்துறை
எண் 300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ்
சென்னை –600 010

பொருள்: தமிழ்நாடு இளம் சிறார் நீதிச்சட்டவிதிகள்2017ன்படிசெங்கல்பட்டு அரசு கூர்நோக்குஇல்லத்தில்உள்ள சிறார்கள் மற்றும் ஆய்வு செய்யப்பட்ட விவரம் தொடர்பான தகவல்களை பிரிவு 7(1) ன்கீழ், வாழ்வுரிமைமற்றும்தனிமனிதசுதந்திரம்அடிப்படையில் 48 மணிநேரத்திற்குள்வழங்கிடக்கோருதல்.

செங்கல்பட்டுமாவட்டத்தில்அமைந்துள்ளஅரசுகூர்நோக்குமற்றும்சிறப்புஇல்லத்தில் 17 வயதான எனது மகன் கோகுல்ஸ்ரீஎன்றசிறுவன்டிசம்பர் 30 அன்று சந்தேகத்திற்கிடமானவகையில்மரணித்திருப்பதுபெரும்அதிர்ச்சியைஅளிக்கின்றது. தமிழ்நாடு இளம் சிறார் நீதிச்சட்டவிதிகள்2017ன்படிஇதுபோன்ற கூர்நோக்கு இல்லங்கள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி மாவட்ட அரசு அலுவலர்கள் முறையான கால இடைவெளியில் கூர்நோக்குஇல்லங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து கண்காணிப்பதுஅவசியமாகும்.

எனது மகன் கோகுல்ஸ்ரீஎன்றசிறுவன்சந்தேகத்திற்கிடமானவகையில்இறந்துபோயிருக்கும்சூழலில்கடந்த 2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில் செங்கல்பட்டு அரசு கூர்நோக்கு இல்லம் குறித்த கீழ்காணும் தகவல்களை தகவல் பெறும் சட்டம் பிரிவு 7(1)ன்கீழ், வாழ்வுரிமைமற்றும்தனிமனிதசுதந்திரம்அடிப்படையில் 48 மணிநேரத்திற்குள்வழங்கிடகோருகிறேன். இத்தகவல்கள் எந்த வடிவத்தில்உள்ளதோ(Template / Format)அதே வடிவத்தில் அளித்திட வேண்டுகிறேன். நான் எவ்வித புதிய வடிவத்திலும் இத்தகவல்களை கோரவில்லை. மேலும் தனிப்பட்ட சிறுவர்களின்அடையாளம் தொடர்பான எவ்வித விவரங்களையும் தகவல்களாக கோரவில்லை. எண்ணிக்கை சார்ந்த விவரங்களை, அதற்கான ஆவணங்களைமட்டுமே கோருகிறேன்.

**கோரப்படும்தகவல்கள்:**

 36

1. இளஞ்சிறார்நீதிசட்டத்தின்படிசெங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லத்திற்கு மாநில சமூகப் பாதுகாப்புத்துறையால்வழங்கப்பட்டபதிவுச்சான்றிதழ் நகல் சான்றொப்பமிட்டு அளிக்கவும்.
2. இளஞ்சிறார்நீதிசட்டத்தின்படிசெங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லத்தில்முறையாக அனுமதிக்கப்பட வேண்டிய குழந்தைகளின்எண்ணிக்கைவிவரங்களை ஆண்டு வாரியாக (2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில்) அளிக்கவும்.
3. தமிழ்நாடுசிறார்நீதி (குழந்தைகளின்பராமரிப்புமற்றும்பாதுகாப்பு) சட்டவிதிகள், 2017விதி14(2)ன்படிவெவ்வேறு மாவட்டங்களில் உள்ள இளம் சிறார் நீதிக்குழுமங்கள்(Juvenile Justice Board) வழங்கிய "Placement Order" மூலம் செங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லத்தில்தங்கவைக்கப்பட்ட குழந்தைகளின்எண்ணிக்கை விவரங்களை ஆண்டு வாரியாக (2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில்) அளிக்கவும்.
4. தமிழ்நாடுசிறார்நீதி(குழந்தைகளின்பராமரிப்புமற்றும்பாதுகாப்பு) சட்ட விதிகள், 2017விதி25(2)(a)ன்படிசெங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லம் / சிறப்பு இல்லத்தில்தங்கவைக்கப்பட்ட இளம் சிறார்கள் "உடல் - மனநிலை, செய்தகுற்றத்தின்தன்மை மற்றும் வயதின் அடிப்படையில் (7-11 வயது, 12-15 வயதுமற்றும் 16-18 வயது) வகைப்படுத்தி பிரிக்கப்பட்டுஇருந்ததன் விவரம் மற்றும் இதன் அடிப்படையிலான எண்ணிக்கை விவரங்களை ஆண்டு வாரியாக (2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில்) அளிக்கவும்.
5. செங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லத்தில்பணிபுரியும்பணியாளர்கள்விபரம்மற்றும்பணியில்சேர்ந்தநாள்குறித்தவிவரங்களை அளிக்கவும்.
6. தமிழ்நாடுசிறார்நீதி (குழந்தைகளின்பராமரிப்புமற்றும்பாதுகாப்பு) சட்டவிதிகள், 2017விதி43(4)ன்படி"மாவட்டமற்றும்அமர்வுநீதிபதி (District and Sessions Judge)தலைமையில் முதன்மைநீதிமன்ற நடுவர் (Principal Magistrate), இளம் சிறார் நீதிக்குழுமஉறுப்பினர்கள் (Juvenile Justice Board), காவல்துறை அலுவலர்கள், குழுமத்தில்உள்ளஉதவிஅரசுவழக்கறிஞர், கூர்நோக்கு இல்லம் அல்லது சிறப்பு இல்லத்தின்பொறுப்பாளர்அல்லதுநன்னடத்தைஅலுவலர்கள் மற்றும் மருத்துவஅலுவலர்கள் அடங்கியகுழுவினரால்மூன்றுமாதங்களுக்குஒருமுறைதிறனாய்வுக்கூட்டத்தை(**Review Meeting)** நடத்திகுழந்தைகள்தொடர்பானபிரச்சினைகள்மற்றும்மறுவாழ்வு பணிகள் திறம்படமேற்கொள்ளப்படுவதைஉறுதிசெய்திட வேண்டும். இந்தச் சட்டவிதி43(4)ன்படிசெங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லத்தில் கடந்த 2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில்நடந்த திறனாய்வுக்கூட்டத்தின் விவரங்களை" தேதி வாரியாகஅளிக்கவும். மேலும் மேற்கண்ட காலகட்டத்தில் நடைபெற்ற . திறனாய்வுக்கூட்டங்களின்சான்றொப்பமிட்ட அறிக்கை நகல்களைவழங்கிடவும்.

37

7. தமிழ்நாடுசிறார்நீதி (குழந்தைகளின்பராமரிப்புமற்றும்பாதுகாப்பு) சட்டவிதிகள், 2017விதி43(5)ன்படி"இளம் சிறார் நீதிக் குழுமம் இரண்டுமாதங்களுக்குஒருமுறைகூர்நோக்குஇல்லத்தின்செயல்பாடுகளைஆய்வுசெய்துமதிப்பீடுசெய்திட வேண்டும். குறிப்பாக ஒருகுழந்தையைஇல்லத்திற்கு அனுப்பும்போது, அக்குழந்தையின் கல்வி, தொழில்நுட்பக்கல்வி, மருத்துவம், நடத்தைமேலாண்மை மற்றும் குழுமத்தால்நிர்ணயிக்கப்பட்டவேறுகூடுதல் வரையறைகள்அடிப்படையில்குழந்தையின்வளர்ச்சித்தேவைகள்போதுமானஅளவுகவனிக்கப்பட்டிருப்பதைஉறுதிசெய்திட வேண்டும்.இந்தச் சட்டவிதி 43(5)ன்படி செங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லத்தில் கடந்த 2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில்மேற்கொள்ளப்பட்ட ஆய்வு" விவரங்களை தேதி வாரியாகஅளிக்கவும். மேலும் மேற்கண்ட காலகட்டத்தில் நடைபெற்ற திறனாய்வுக்கூட்டங்களின்சான்றொப்பமிட்ட அறிக்கை நகல்களைவழங்கிடவும்.
8. தமிழ்நாடுசிறார்நீதி (குழந்தைகளின்பராமரிப்புமற்றும்பாதுகாப்பு) சட்டவிதிகள், 2017விதி43(11)ன்படி"மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு ஆறு மாதங்களுக்கு ஒருமுறைகுழந்தை பராமரிப்பு நிறுவனம்,கூர்நோக்குஇல்லங்களைஆய்வுசெய்து உரிய நடவடிக்கை எடுத்திடவேண்டும். இச்சட்டப்பிரிவுபடி செங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லத்தில் கடந்த 2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில்மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு மேற்கொண்ட ஆய்வு" விவரங்களை தேதி வாரியாகவும்கூட்டங்களின்சான்றொப்பமிட்ட அறிக்கை நகல்களையும் அளிக்கவும்.
9. தமிழ்நாடுசிறார்நீதி (குழந்தைகளின்பராமரிப்புமற்றும்பாதுகாப்பு) சட்டவிதிகள், 2017விதி42(1)ன்படி"மாநில ஆய்வுக்குழு மூலம் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின்செயற்பாடுகளை ஆய்வு செய்வதும், மறுஆய்வுசெய்வதும் அவசியம். இதன்படி கடந்த 2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில்தமிழகத்தில் உள்ள குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் மீது நடத்தப்பட்ட ஆய்வு" விவரங்களை தேதி வாரியாக அளிக்கவும். இந்த ஆய்வறிக்கையின்சான்றொப்பமிட்டநகல்களையும் அளிக்கவும்.
10. தமிழ்நாடுசிறார்நீதி (குழந்தைகளின்பராமரிப்புமற்றும்பாதுகாப்பு) சட்டவிதிகள், 2017விதி42(2)ன்படி"மாவட்ட ஆய்வுக்குழுக்கள்மூலம் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின்செயற்பாடுகளை ஆய்வு செய்வது அவசியம். இதன்படி கடந்த 2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில்செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் மீது நடத்தப்பட்ட ஆய்வு விவரங்களை தேதி வாரியாக அளிக்கவும். இந்த ஆய்வறிக்கையின்சான்றொப்பமிட்டநகல்களையும் அளிக்கவும்.
11. தமிழ்நாடுசிறார்நீதி (குழந்தைகளின்பராமரிப்புமற்றும்பாதுகாப்பு) சட்டவிதிகள், 2017விதி 36 ன்படி"நன்னடத்தை அலுவலர் கூர்நோக்குஇல்லத்தில் இருக்கும் குழந்தைகளின் சமூக புலனாய்வு அறிக்கை படிவம் 1ன்படி ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இதன்படி செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசு கூர்நோக்கு இல்லம் / சிறப்பு

 38

இல்லத்தில்தங்கவைக்கப்பட்டிருந்த எனது மகன் கோகுல் ஸ்ரீ தொடர்பாகநடத்தப்பட்ட சமூக புலனாய்வு அறிக்கை படிவம் 1ன்சான்றொப்பமிட்ட நகல் அளிக்கவும்.

12. கடந்த 2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில்செங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லத்தில் இருந்த இளம் சிறார்கள்எவரேனும் ஏதேனும் காரணத்தால் மரணமடைந்துள்ளனரா என்ற எண்ணிக்கை விவரத்தை ஆண்டு வாரியாக அளிக்கவும்.
13. 2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில்கூர்நோக்குஇல்லத்தைபார்வையிட்டஅலுவலர்களின் பெயர் (பதவிமற்றும்அலுவலகத்துடன்),பார்வையிட்ட நாள்,கண்டறியப்பட்டகுறைபாடுகள் மற்றும் அவர்கள் சமர்பித்த அறிக்கை நகல்கள் (சான்றொப்பமிட்ட) அளிக்கவும்.
14. செங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லத்தில்உள்ளஇளம் சிறார்களுக்குமனநலஆலோசனைமற்றும் ஆற்றுப்படுத்தும் பணியை மேற்கொள்ளும் நிபுணரின் பெயர், பொறுப்பு,இல்லத்திற்கு வருகை தந்த விவரம் உள்ளிட்ட தகவல்களை 2020-21, 2021-22, 2022 ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரையிலானகாலகட்டத்திற்குவழங்கிடவும்.
15. செங்கல்பட்டு அரசுகூர்நோக்குஇல்லத்தில் உள்ள அரசு வாகனங்களின் "log book" நகல் 01.12.2022 முதல் 18.01.2023வரையிலானகாலகட்டத்திற்கு அளிக்கவும்.

இத்துடன்ரூ.10 மதிப்புள்ளநீதிமன்றதபால்தலைஇந்தமனுவுடன்இணைத்துள்ளேன். மேலும்கூடுதல்பக்கங்களுக்குதேவையானகட்டணத்தைசெலுத்ததயாராகஉள்ளேன். தகவல்களை 48 மணிநேரத்திற்குள்அனுப்பிவைக்குமாறுகனம்சமூகம்அவர்களைகேட்டுகொள்கிறேன்.

இப்படிக்கு

ப. பிரியா

(ப. பிரியா)

நாள் : 19.01.2023

இடம் : தாம்பரம்

20.1.2023

39

RT606145129IN IVR:8284606145129
RL CHENGALPATTU RMS COUNTER <603001>
Counter No:1,20/01/2023,19:27
To:POTHU THAGAVA,KELLIS
PIN:600010, Kilpauk S.O
From:P PRIYA ,KUPPAI MEDU
Wt:20gms
Amt:28.00(Cash)
<Track on www.indiapost.gov.in>
<Dial 18002666868> <Wear Masks, Stay Safe>

RT606145375IN IVR:8284606145375
RL CHENGALPATTU RMS COUNTER <603001>
Counter No:1,20/01/2023,19:27
To:POTHU THAGAVA,KELLIS
PIN:600010, Kilpauk S.O
From:P PRIYA ,KUPPAI MEDU
Wt:15gms
Amt:28.00(Cash)
<Track on www.indiapost.gov.in>
<Dial 18002666868> <Wear Masks, Stay Safe>

Rs. 56.00

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் கண்காணிப்பகம்

# TamilNadu Child Rights Watch (TNCRW)

State Secretariat — Ms. Gandhimathi Alagar, State Convener, LAW Trust, 11/1A Ramakrishna Paramahamsar Street, Velippalayam, Behind Nadar street, Nagapattinam 611001 9443103273 tncrwconvener@gmail.com

State Co Conveners — Ms. Stegana Jency LT — Mr. Devaneyan

**Tmt. P. Geetha Jeevan** 17. 01. 2023
Hon'ble Minister for Social Welfare & Women Empowerment
Government of TamilNadu,
Fort St. George, Chennai

Dear Madam,

**Sub: Justice to the Custodial Death of Gokul Sree - 17 year old boy in Juvenile Home, Chengelpattu**

Section 3 of the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015 (JJ Act, 2015) prescribes that the Central Government, the State Governments, the Board and other agencies, as the case may be, while implementing the provisions of JJ Act, 2015, are expected to be guided by the General Principles of Care and Protection of Children. The death of a 17 year old boy Gokulsri in mysterious circumstances at a Juvenile Home, Chengalpattu on 31st December 2022 was not only shocking but brings us to the rude reality that the correctional settings still remain as the "Hell holes".

TNCRW welcomes the immediate intervention by the district administration and district judicial administration for inquiry into the death that revealed that the boy was actually murdered though the Department of Social Defence hushed to wrap it as Food Poisoning. We also appreciate the action of arresting 6 personnel of the Juvenile Home (Observation and Special Home) who attacked the boy that led to the death of the Juvenile. The death of Gokul Sree has clearly highlighted that the Principles of Juvenile Justice System has completely failed.

Co Conveners Contact

CCRD, PillaiyarKoil Street, PATTIPIULAM (ECR), Mamallapuram – Via, KancheepuramDistirct- 603104

THOZHAMAI149/42, Ellaiamman Koil Street, Vannarthurai, Adayar, Chennai - 600 020

 41

Section 3 (ix) of the Juvenile Justice (Care and Protection of Children) Act 2015, states that "No waiver of a child's right, whether sought by the child or a person acting on behalf of the child, or by a Board or a Committee, is authorized or legitimate, and any non-exercise of a fundamental right must not amount to waiver." This is a reiteration of the Government of India's commitment to the United Nations Standard Minimum Rules for the Administration of Juvenile Justice, 1985 commonly known as the "Beijing Rules"

The entire personnel in the Chengalpattu Juvenile Home and the Higher Officials of the Department of Social Defence have clearly violated the Section 3(xvi) of the JJ Act 2015 states that all persons or bodies acting in a judicial capacity under this Act shall adhere to basic procedural standards of fairness, including the right to a fair hearing, the rule against bias, and the right to review.

Deeply worried by the incident, TNCRW recommends the following actions to be taken to be bring reform in the Administration of Juvenile Justice (Observation Homes-OH and Special Homes-SH) for the protection of children as well as preventing them to become habitual offenders;

1. Role of different levels of officials and personnel from the Home should be thoroughly investigated and all those involved in this case should be immediately arrested, permanently dismissed and criminal proceedings against them should be speeded up.
2. A special investigation team should be set up to investigate all the circumstances that led to the child's death and identify gaps in the delivery of juvenile justice and comprehensive rehabilitation and social reintegration
3. The arrested accused should not be given bail till the completion of investigations. This will help to prevent the same kind of incidents in future.
4. The case must be entrusted for a court monitored investigation under the supervision of the Principal District Judge. A special Committee with the participation of the Legal fraternity, Social Workers and representatives of child rights organizations should be formed to support the investigation.
5. The State should immediately extend an amount of Rs.10 lakhs as compensation to the family of Gokul Sree family and assure government employment to one of his family members.
6. An audit of all the deaths (every death) and break and run cases happened in the observation and special homes in the last 10 years should be held by a team

 42

comprising of Social Workers, Psychologists, Criminologists, Legal and Medical Fraternity.

7. For the past 10 years, the inspection committee has not done any inspection in both Observation and Special Homes to monitor the progress and support needed to the children and the structures. We recommend to form an inspection committee to identify the status of all OH and SH in Tamil Nadu
8. The JJ Act requires concurrent training and capacity building of Juvenile Justice Board, Police, Child Care Institution officials and other stakeholders. The trainings are conducted without any accountability. Much training fails to address the Knowledge, Skill, Attitude and Value elements that any training should possess. All the members are not sufficiently trained to handle children in a child friendly manner for behaviour change or efforts for diversions..
9. The procedural requirements under the JJ Act, lie mainly on the police and the probation officer. However, there are several shortcomings associated with their functioning. There are a number of instances of abuse of discretion by police in the form of illegal and unnecessary detentions, and obnoxious interrogation methods. They are all obligated under the JJ Act, to ensure child friendly procedures in the legal proceedings and at the same time a child friendly handling methods for preventing them to become habitual offenders.
10. Rights of children are respected and their best interest given paramount consideration. This applies to children in conflict with the law (CICL) especially because we look at them not as offenders but as individuals who need special protection and assistance. This we can achieve only through the appointment of a trained staff team especially on the attitude of the juvenile justice functionaries, otherwise which have blunted the whole objective of the JJ Act.
11. The present team in all the observation and Special Homes needs to shift their approach from retributive to restorative justice in handling CICL. This needs to be strictly monitored.
12. After various efforts over the years, the observation homes and special homes continue to remain a Minor Jail in spirit though it was named as Observation and Special Homes in letter, though the nomenclature has changed. The attitude and behaviour of the staff in these homes have not changed. Hence all the officers and staff members from these institutions should be transferred en masse to other secretarial roles in the department that has no connection with these institutions. Individuals with aptitude, accountability and commitment for investing their time on these children with required qualification be recruited, trained and appointed in creating a conducive environment for meaningful rehabilitation, social reintegration and prevent them from becoming habitual offenders.

 43

13. Beijing Rules which states that to build and maintain the requisite professional competence of all personnel dealing with juvenile cases, their professional education, in-service training, refresher courses, and other relevant forms of instruction should always be used. Personnel in the juvenile justice system must reflect the diversity of kids who come into touch with it. Efforts will be taken to ensure that women and minorities are fairly represented in juvenile justice systems

14. The diversion of a child to appropriate programs is an imperative as a therapeutic adjunct to the principle of restorative justice. This is totally lacking in all the Observation and Special Homes. There is a need for diversion as an alternative process that provides restorative justice and community -based responses to child's misbehaviour that may work more effectively for the best interest of the child than the strong arm of the law or punishment. Diversion would also prevent destructive labelling. The practice serves to hinder the negative effects of subsequent proceedings in the juvenile justice administration such as stigma of conviction and sentence. We strongly recommend taking necessary steps for diversion programs.

15. Rehabilitation facilities are very poor and psychological counselling and treatment were practically non-existent in many homes. There has been a gross failure in the existing juvenile justice system primarily because its provisions relating to rehabilitation, vocational training and social reintegration have not been implemented based on the interest of the children. There is an urgent need for rehabilitation facilities with proper counselling and treatment with continuous follow-up support.

Any society which does not uphold the right of children to grow up in a free and fair manner, protecting their rights for a conducive environment to grow and flourish is in deep moral trouble. The dravidian model of development will not be complete with the children, especially the vulnerable being treated with utmost sensibility.

TNCRW calls for immediate consideration of the above concerns in the best interest of every child in the state in ensuring a state that is fit for children to be happy and prospering.

Thanking You

In Solidarity for Child Rights

A. Gandhimathi

भारत सरकार
GOVERNMENT OF INDIA
राष्ट्रीय बाल अधिकार संरक्षण आयोग
NATIONAL COMMISSION FOR PROTECTION OF CHILD RIGHTS
नई दिल्ली–110 001
New Delhi - 110 001

No. NCPCR/CP/Tour/TN/2023/DD2411
Dated: 17th January, 2023

| | |
|---|---|
| PS to Chief Secretary,<br>Government of Tamil Nadu , | **( Fax No. 044-25671555/8486)**<br>Email: cs@tn.nic.in |
| Dy. Secretary (Protocol),<br>State Protocol Officer,<br>Government of Tamil Nadu | **(Fax No. 044-25672595)**<br>Email: protocol@tn.gov.in |
| Thiru A.R.Rahul Nadh I.A.S.,<br>District Collector, Chengalpattu,<br>Tamil Nadu. | Tele/Fax : 044-27427412<br>Email: collr-cpt@nic.in |
| Ms. S. Amritha Jothi, IAS<br>District Collector, Chennai, T.N. | Tele: 044-25228025<br>Email: collrchn@nic.in |
| Dr A.PRADEEP I.P.S.,<br>Superintendent of Police,<br>Chengalpattu, T.N. | Tele: 044-29540666<br>Email: cptsboffice@gmail.com |

Sub: **Tour programme of Smt. Anu Chaudhary, Registrar, NCPCR to Chengalpattu District of Tamil Nadu from 19th to 20th January, 2023.**

Respected Sir,

Smt. Anu Chaudhary, Registrar, National Commission for Protection of Child Rights (NCPCR) accompanied by Ms. Anjali Gandhi, Legal Consultant, NCPCR will be visiting Chengalpattu District of Tamil Nadu from 19th to 20th January, 2023, **to conduct an inquiry into the incident of death of a minor boy in the Govt. Special Home for Boys at Chengalpattu,** as per following tour programme:-

| | | | | |
|---|---|---|---|---|
| **19.01.2023** | Dep. | Delhi | 0825 hrs. | By Indigo 6E 6238 |
| | Arr. | Chennai Airport | 1120 hrs. | |
| | Dep. | Chennai Airport | 1130 hrs. | By Road |
| | Arr. | Chengalpattu Distt Hqrs | 1230 hrs. | |
| **1230 to 1900 hrs.** | ➢ **Visit to Govt. Special Home for Boys at Chengalpattu to inquiry into the incident of death of a minor boy in the said Home, interaction with Home's staff and other children staying in the Home**<br>➢ **Interaction with concerned Dy.SP & I.O, Doctor who conducted the autopsy, CWC & DCPO and other relevant functionaries**<br>➢ **Visit to deceased's home and interaction with family members, if needed** | | | |

Contd....



17.1.23

 45



| | | | | |
|---|---|---|---|---|
| **19.01.2023** | Dep | Chengalpattu | 1900 hrs. | By Road |
| | Arr. | Chennai | 2000 hrs. | |
| | **Night Halt at Chennai** | | | |
| **20.01.2023** | Dep. | Chennai | 1120 hrs. | By Vistara UK 836 |
| | Arr | Delhi | 1355 hrs. | |

2. District Magistrate, Chengalpattu is requested to kindly issue necessary directions to all concerned to be available for the said inquiry, as mentioned above and to conduct the visit accordingly.

3. It is requested that necessary arrangements for reception, suitable transport, security as per scale and **accommodation etc. for Ms. Anu Chaudhary, Registrar and accompanying NCPCR officer, as mentioned above,** may kindly be made, during the said visit to the State.

4. It is also requested that name, designation, phone/fax number of *protocol/Liaison officer*, who will be coordinating the visit of Registrar, NCPCR may please be communicated at telephone and email id : cp.ncpcr@nic.in of the Commission and **mobile No. of Miss Anjali Gandhi, Legal Consultant, Mob. 9717156365.**

This issues with the approval of Hon'ble Chairperson, NCPCR.

Regards,

Yours sincerely,

17.1.2023

(Dharmendra Bhandari)
Principal Private Secretary
to Chairperson, NCPCR
Mobile No. 9868176672

Copy for information and necessary action to :-

1. Secretary, Social Welfare Department, Govt. of Tamil Nadu, Email: swsec@tn.gov.in
2. The DGP, Tamil Nadu. Email: dgp@tn.gov.in

17.1.2023

Principal Private Secretary
to Chairperson, NCPCR

 46

சென்னை–10, சமூகப்பாதுகாப்புத்துறை, இயக்குநர் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்:– திருமதி.ச.வளர்மதி, இ.ஆ.ப.,
இயக்குநர்.

எண்.939/அ1/2023–4 நாள்.19.01.2023

பொருள்:– பணியாளர் தொகுதி – சமூகப்பாதுகாப்புத்துறை – செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் பணியாளர்களை குழந்தைகள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி பணியிடமாற்றம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:– இணை இயக்குநரின் ஆய்வறிக்கை நாள்.14.01.2023.

------

ஆணை:–

பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம்.2016, விதி 48(3)ன்படி, செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் பணியாளர்களில் மின்கம்பியார்களை குழந்தைகள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி, பின்வருமாறு பணியிடமாற்றம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி / பணிபுரியும் நிறுவனம். | பணியிடமாற்றம் செய்யப்படும் நிறுவனம். |
|---|---|---|
| | திருவாளர்கள்:– | |
| 1 | ஹாஜா, மின்கம்பியாளர்,<br>அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு | அரசினர் குழந்தைகள் இல்லம்,<br>தட்டப்பாறை. |
| 2 | சி.அருணாசலம், மின்கம்பியாளர்,<br>அரசினர் குழந்தைகள் இல்லம், தட்டப்பாறை. | அரசினர் சிறப்பு இல்லம்,<br>செங்கல்பட்டு |

மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் புகார்களின் அடிப்படையில் நிருவாக காரணங்களுக்காக பணியிடமாற்றம் செய்யப்படுகின்றனர். மேற்படி, பணியாளர்கள் பணியில் சேர்ந்த விவரத்திணை இயக்ககத்திற்கு தெரிவிக்க சம்பந்தப்பட்ட நிறுவன கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ச.வளர்மதி,
இயக்குநர்.

பெறுநர்:–
சம்பந்தப்பட்ட பணியாளர்கள் (நிறுவன கண்காணிப்பாளர்கள் மூலமாக)
கண்காணிப்பாளர்கள் அரசினர் சிறப்பு இல்லம் செங்கல்பட்டு/ அரசினர் குழந்தைகள் இல்லம், தட்டப்பாறை.

நகல்:–
அரசு முதன்மை செயலர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தலைமை செயலகம், செ–9.
சார்நிலை/மாவட்ட கருவூல அலுவலர், செங்கல்பட்டு /தூத்துக்குடி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர், 19/1/23
19/01/23

20.01.2023.
செங்கல்பட்டு.

47

அனுப்புநர்

ப. சு. பாரதி அண்ணா,
மாவட்டச் செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
(அரசியல் கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகள் கூட்டமைப்பின்
ஒருங்கிணைப்பாளர், செங்கல்பட்டு)

பெறுநர்

**உயர்திரு. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,**
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.
செங்கல்பட்டு

ஐயா,
வணக்கம்!

**பொருள்: செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் நடந்த சிறுவன் கோகுல்ஸ்ரீ கொலை வழக்கில் தொடர்புடைய அனைவரையும் விசாரணைக்கு உட்படுத்தி, நடவடிக்கை எடுக்கவும், இல்லத்தை நேரடியாக ஆய்வு செய்து சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதியும், நிவாரணமும் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கவும் கோரிக்கை மனு**

செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் நடந்த சிறுவன் கோகுல்ஸ்ரீ கொலை வழக்கு தொடர்பாக, பல்வேறு அரசியல் கட்சிகள், இயக்கங்கள் சார்பில் 19.01.2023 அன்று விவாதித்து ஆலோசனை செய்யப்பட்டு, முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்கள் அடிப்படையில் கோரிக்கை மனுவை உங்களிடம் தருகின்றோம்.

செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கோகுல்ஸ்ரீ கொலை செய்யப்பட்ட சம்பவம் காவல்துறையின் ஆரம்பகட்ட விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. 31.12.2022 அன்று நடந்த கொலை சம்பவத்தை மறைத்து, விசத்தன்மை கொண்ட உணவு அருந்தியதால் சிறுவன் கோகுல்ஸ்ரீ இறந்ததாக, அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் கூர்நோக்கு இல்லத்தின் மேலாளர் திரு. பாலாஜி என்பவர் 01.01.2023 அன்று இடமாற்றம்

48

செய்யப்பட்டுள்ளார். அதன்பின்பு நீதிமன்ற நடுவரின் விசாரணை அறிக்கையின் அடிப்படையில் கூர்நோக்கு இல்லத்தின் காவல்துறையினர், குற்றத்தில் ஈடுபட்ட ஆறு நபர்கள் மீது தாமதமாக 12.01.2023 அன்று வழக்கு பதிவு செய்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலையான சிறுவன் கோகுல்ஸ்ரீ-ன் தாயார் பிரியா-வை கடத்தி, அடைத்து வைத்து சித்திரவதை செய்து மிரட்டிய மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் சிவக்குமார் உட்பட, சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் பணியாற்றும் தலைமைக் காவலர் திரு. ஜெயராஜ், திருமிகு. சரஸ்வதி, திருமிகு. சாந்தி ஆகியோர் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள். மேலும் 14.01.2023 அன்று விசாரணைக்கு வந்த சமூக நலத்துறையின் இயக்குநர் திருமிகு. வளர்மதி அவர்கள் ஏற்கெனவே பணியிடமாற்றம் செய்யப்பட்ட திரு. பாலாஜி, முன்னாள் மேலாளர் என்பவரை உடன் அழைத்துக் கொண்டு வந்துள்ளார். இந்த செயலினால் வழக்கிற்கான ஆவணங்களை மறைக்க வாய்ப்புள்ளது என சந்தேகப்படுகிறோம்.

செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் உள்ள, பல சிறுவர்கள் தொடர்ந்து அடித்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவது தொடர்ந்து நடந்து வந்துள்ளது. எனவே மாவட்ட அளவில் குழந்தைகளை பாதுகாக்கவும் எதிர்வரும் காலத்தில் குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கவும் அரசு அமைப்புகளின் தலைவராக உள்ள மாவட்ட ஆட்சித் தலைவராகிய தாங்கள், நேரடியாக செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்திற்குச் சென்று ஆய்வு செய்து, சிறுவர்களுக்கு ஆற்றுப்படுத்துதல் செய்து, சிறுவர்களின் ஆடைகளை கழற்றக்கோரி அவர்களின் உடல்களில் உள்ள காயங்களை உறுதிப்படுத்தி அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென கோருகிறோம். மேலும் இந்த வழக்கில் அதிகாரம் படைத்தவர்கள் தலையீடு செய்து, வழக்கினை நீர்த்துப் போகச் செய்ய வாய்ப்புள்ளதால், சி.பி.சி.ஐ.டி விசாரணை நடத்த ஆவண செய்ய வேண்டும்.

 49

கொலையான கோகுல்ஸ்ரீ குடும்பத்திற்கு நிரந்தரமான பாதுகாப்பான வீடு வழங்குமாறும் கோருகின்றோம். கோகுல்ஸ்ரீ கொலையில் பாதிக்கப்பட்ட சிறுவனின் தாய் பிரியா என்பவர், கணவர் இல்லாமல் தற்போது ஐந்து குழந்தைகளோடு வாழ வழியின்றி உள்ளார். எனவே அவரின் வாழ்வாதார உரிமையை உறுதிப்படுத்த அரசு வேலை வழங்க வேண்டுமென கோருகின்றோம். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 10 இலட்சம் நிவாரணத் தொகை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பரிந்துரைகளை செய்ய வேண்டுமென கோரிக்கையினை முன் வைக்கிறோம்.

இப்படிக்கு,

(பாரதி அண்ணா)
மாவட்டச் செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
**(ஒருங்கிணைப்பாளர், அரசியல் கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகள் கூட்டமைப்பு சார்பாக)**

சென்னை–10, சமூகப்பாதுகாப்புத்துறை, இயக்குநர் செயல்முறைகள்
அனுப்புபவர்:– திருமதி.ச.வளர்மதி, இ.ஆ.ப.,
இயக்குநர்.

எண்.939/அ1/2023–3 நாள்.21.01.2023

பொருள்:– பணியாளர் தொகுதி – சமூகப்பாதுகாப்புத்துறை – செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் பணியாளர்களை குழந்தைகள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி பணியிடமாற்றம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:– இணை இயக்குநரின் ஆய்வறிக்கை நாள்.14.01.2023.

-----

ஆணை:–

பார்வையில் குறிப்பிட்டுள்ள ஆய்வறிக்கையினைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம்,2016, விதி 48(3)ன்படி, செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் பின்வரும் பணியாளர்களை குழந்தைகள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி, கீழ்க்கண்டவாறு பணியிடமாற்றம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி / பணிபுரியும் நிறுவனம். திருவாளர்கள்:– | பணியிடமாற்றம் செய்யப்படும் நிறுவனம். |
|---|---|---|
| 1 | எம்.எம்.எஸ். சையதுஅனிஸ் தோட்டப்பணியாளர், அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு | அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், ஆத்தூர் செங்கல்பட்டு. |
| 2 | கற்பகஜோதி, தோட்டப்பணியாளர், அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், ஆத்தூர் செங்கல்பட்டு. | அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு |

மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் புகார்களின் அடிப்படையில் நிருவாக காரணங்களுக்காக பணியிடமாற்றம் செய்யப்படுகின்றனர். மேற்படி, பணியாளர்கள் பணியில் சேர்ந்த விவரத்தினை இயக்ககத்திற்கு தெரிவிக்க சம்பந்தப்பட்ட நிறுவன கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ச.வளர்மதி,
இயக்குநர்.

பெறுநர்:–
சம்பந்தப்பட்ட பணியாளர்கள் (நிறுவன கண்காணிப்பாளர்கள் மூலமாக)
கண்காணிப்பாளர்கள் அரசினர் சிறப்பு இல்லம் செங்கல்பட்டு/ அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம்,ஆத்தூர் செங்கல்பட்டு.

நகல்:–
அரசு முதன்மை செயலர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தலைமை செயலகம், செ–9.
சார்நிலை கருவூல அலுவலர், செங்கல்பட்டு /~~தூத்துக்குடி~~.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர். 21/1/2023

21/1/23

Scanned with OKEN Scanner

சென்னை-10, சமூகப்பாதுகாப்புத்துறை, இயக்குநர் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்:- திருமதி.ச.வளர்மதி, இ.ஆ.ப.,
இயக்குநர்.

எண்.939/அ1/2023-4 நாள்.21.01.2023

பொருள்:- பணியாளர் தொகுதி - சமூகப்பாதுகாப்புத்துறை - செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் பணியாளர்களை குழந்தைகள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி பணியிடமாற்றம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:- இணை இயக்குநரின் ஆய்வறிக்கை நாள்.14.01.2023.

-----

ஆணை:-

பார்வையில் குறிப்பிட்டுள்ள ஆய்வறிக்கையினைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம்,2016, விதி 48(3)ன்படி, செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் பின்வரும் பணியாளர்களை குழந்தைகள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி, கீழ்க்கண்டவாறு பணியிடமாற்றம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி / பணிபுரியும் நிறுவனம். திருவாளர்கள்:- | பணியிடமாற்றம் செய்யப்படும் நிறுவனம். |
|---|---|---|
| 1 | வி.மணிகண்டன், தூய்மைப் பணியாளர், அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு | அரசினர் குழந்தைகள் இல்லம், விழுப்புரம். |
| 2 | கா.அம்சவேல், தூய்மைப் பணியாளர், அரசினர் குழந்தைகள் இல்லம், விழுப்புரம் | அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு |
| 3 | எம்.சின்னமுத்து, தூய்மைப் பணியாளர், அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு | அரசினர் வரவேற்பு இல்லம், இராணிப்பேட்டை. |
| 4 | என்.சரவணன், தூய்மைப் பணியாளர், அரசினர் வரவேற்பு இல்லம், இராணிப்பேட்டை. | அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு |

மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் புகார்களின் அடிப்படையில் நிருவாக காரணங்களுக்காக பணியிடமாற்றம் செய்யப்படுகின்றனர். மேற்படி, பணியாளர்கள் பணியில் சேர்ந்த விவரத்தினை இயக்ககத்திற்கு தெரிவிக்க சம்பந்தப்பட்ட நிறுவன கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ச.வளர்மதி,
இயக்குநர்.

பெறுநர்:-
சம்பந்தப்பட்ட பணியாளர்கள் (நிறுவன கண்காணிப்பாளர்கள் மூலமாக)
கண்காணிப்பாளர்கள் அரசினர் சிறப்பு இல்லம் செங்கல்பட்டு/ அரசினர் வரவேற்பு இல்லம், இராணிப்பேட்டை/அரசினர் குழந்தைகள் இல்லம், விழுப்புரம்.

நகல்:-
அரசு முதன்மை செயலர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தலைமை செயலகம், செ-9.
சார்நிலை கருவூல அலுவலர், செங்கல்பட்டு /இராணிப்பேட்டை வாலாஜா/விழுப்புரம்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர் 21/1/2023

Scanned with OKEN Scanner

சென்னை–10, சமூகப்பாதுகாப்புத்துறை, இயக்குநர் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்:– திருமதி.ச.வளர்மதி, இ.ஆ.ப.,
இயக்குநர்.

எண்.939/அ1/2023–5 நாள்.21.01.2023

பொருள்:– பணியாளர் தொகுதி – சமூகப்பாதுகாப்புத்துறை – செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பணியிடமாற்றம் செய்து – ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:– இணை இயக்குநரின் ஆய்வறிக்கை நாள்.14.01.2023.

-----

ஆணை:–

பார்வையில் குறிப்பிட்டுள்ள ஆய்வறிக்கையினைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம்,2016, விதி 48(3)ன்படி, செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் பின்வரும் பணியாளர்களை குழந்தைகள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி, கீழ்க்கண்டவாறு பணியிடமாற்றம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி / பணிபுரியும் நிறுவனம். திருவாளர்கள்:– | பணியிடமாற்றம் செய்யப்படும் நிறுவனம். |
|---|---|---|
| 1 | பி. மணிகண்டன், பாதுகாவலர், அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு | அரசினர் குழந்தைகள் இல்லம், விழுப்புரம். |
| 2 | பாக்கியராஜ், பாதுகாவலர், அரசினர் குழந்தைகள் இல்லம், விழுப்புரம். | அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு |
| 3 | எஸ்.சுரேஷ், பாதுகாவலர், அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு | அரசினர் கூர்நோக்கு இல்லம், சென்னை–10. |
| 4 | ஆர்.குணசேகரன், பாதுகாவலர், அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு | அரசினர் குழந்தைகள் இல்லம், சென்னை–13. |
| 5 | ஷம்சுதின், பாதுகாவலர், அரசினர் குழந்தைகள் இல்லம், செ–13. | அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு |
| 6 | டி. நாகராஜ், பாதுகாவலர், அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு | அரசினர் கூர்நோக்கு இல்லம், செ–10. |
| 7 | ராஜிவ் காந்தி, பாதுகாவலர், அரசினர் கூர்நோக்கு இல்லம், செ–10. | அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு |

மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் புகார்களின் அடிப்படையில் நிருவாக காரணங்களுக்காக பணியிடமாற்றம் செய்யப்படுகின்றனர். மேற்படி, பணியாளர்கள் பணியில் சேர்ந்த விவரத்தினை இயக்ககத்திற்கு தெரிவிக்க சம்பந்தப்பட்ட நிறுவன கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ச.வளர்மதி,
இயக்குநர்.

பெறுநர்:–
சம்பந்தப்பட்ட பணியாளர்கள் (நிறுவன கண்காணிப்பாளர்கள் மூலமாக)
கண்காணிப்பாளர்கள் அரசினர் சிறப்பு இல்லம் செங்கல்பட்டு/ அரசினர் குழந்தைகள் இல்லம், விழுப்புரம்/சென்னை–13/அரசினர் கூர்நோக்கு இல்லம், சென்னை–10.

Scanned with OKEN Scanner

53

நகல்:-

அரசு முதன்மை செயலர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தலைமை செயலகம், செ-9.
சார்நிலை கருவூல அலுவலர், செங்கல்பட்டு /விழுப்புரம்/சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு),
சென்னை/

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/1/2023

கண்காணிப்பாளர்

21/1/23 21/1/23

Scanned with OKEN Scanner

சென்னை-10, சமூகப்பாதுகாப்புத்துறை, இயக்குநர் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்:- திருமதி.ச.வளர்மதி, இ.ஆ.ப.,
இயக்குநர்.

எண்.939/அ1/2023-6 நாள்.21.01.2023

பொருள்:- பணியாளர் தொகுதி - சமூகப்பாதுகாப்புத்துறை - செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் பணியாளர்களை குழந்தைகள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி பணியிடமாற்றம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:- இணை இயக்குநரின் ஆய்வறிக்கை நாள்.14.01.2023.

-----

ஆணை:-

பார்வையில் குறிப்பிட்டுள்ள ஆய்வறிக்கையினைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம்,2016, விதி 48(3)ன்படி, செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் பின்வரும் பணியாளர்களை குழந்தைகள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி, கீழ்க்கண்டவாறு பணியிடமாற்றம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி / பணிபுரியும் நிறுவனம். திருவாளர்கள்:- | பணியிடமாற்றம் செய்யப்படும் நிறுவனம். |
|---|---|---|
| 1 | பி. பிரபாகரன், வாயிற்காவலர், அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு | அரசினர் கூர்நோக்கு இல்லம், திருநெல்வேலி. |
| 2 | திரு.கென்னடி, வாயிற்காவலர், அரசினர் கூர்நோக்கு இல்லம், திருநெல்வேலி. | அரசினர் சிறப்பு இல்லம், செங்கல்பட்டு |

மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் புகார்களின் அடிப்படையில் நிருவாக காரணங்களுக்காக பணியிடமாற்றம் செய்யப்படுகின்றனர். மேற்படி, பணியாளர்கள் பணியில் சேர்ந்த விவரத்தினை இயக்ககத்திற்கு தெரிவிக்க சம்பந்தப்பட்ட நிறுவன கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ச.வளர்மதி,
இயக்குநர்.

பெறுநர்:-
சம்பந்தப்பட்ட பணியாளர்கள் (நிறுவன கண்காணிப்பாளர்கள் மூலமாக)
கண்காணிப்பாளர்கள் அரசினர் சிறப்பு இல்லம் செங்கல்பட்டு/ அரசினர் கூர்நோக்கு இல்லம், திருநெல்வேலி.

நகல்:-
அரசு முதன்மை செயலர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தலைமை செயலகம், சென்னை-9.
சார்நிலை கருவூல அலுவலர், செங்கல்பட்டு /திருநெல்வேலி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature] 21/1/2023
கண்காணிப்பாளர்.

[signature] 21/1/23 [signature] 21/1/23

Scanned with OKEN Scanner

சென்னை–10, சமூகப்பாதுகாப்புத்துறை, இயக்குநர் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்:– திருமதி.ச.வளர்மதி, இ.ஆ.ப.,
இயக்குநர்.

எண்.939/அ1/2023–11 நாள்.21.01.2023

அச்சிறுவனின் தாயார் மறுநாள் தகவலறிந்து அங்கு சென்று பார்த்தபோது, சிறுவனின் உடலில் காயங்கள் ஏதும் இல்லை. ஆனால், அதற்கு மறுநாள் அந்தச் சிறுவனின் உடல்நிலை பாதிக்கப்பட்டதாகவும், மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகவும் அவனது தாய்க்குத் தகவல் கிடைத்தது. அவர் அங்கு சென்று பார்ப்பதற்கு முன்னரே அந்தச் சிறுவன் உயிரிழந்துவிட்டான். சிறுவனின் உடலில் காயங்கள் இருந்ததாகச் சந்தேகித்த அவனது தாய் இது குறித்துக் கேள்வி எழுப்பியபோது, அவர் மிரட்டப்பட்டதாகவும் ஓர் அறையில் அடைத்துவைக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அவர் அங்கிருந்து தப்பிச் சென்று ஆட்சியர் அலுவலகத்தில் புகார் தெரிவித்த பின்னர்தான், நடந்த விஷயங்கள் வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டிருப்பவர்களில், கூர்நோக்கு இல்லச் சிறாருக்குப் பயிற்சியளிக்கவும், அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறியவும் வேண்டிய பணியில் இருப்பவர்களும் அடக்கம் என்பதும், உயரதிகாரிகள் உண்மையை மூடி மறைக்க முயன்றதாக எழுந்திருக்கும் புகார்களும் மிகுந்த வேதனையளிக்கின்றன. சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தந்தை, மகன் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவத்தைவிடவும் மிக மோசமான நிகழ்வு இது என்கிறார்கள் சிறார் பாதுகாப்புச் செயல்பாட்டாளர்கள்.

சந்தர்ப்ப சூழல் காரணமாகக் குற்றங்களில் ஈடுபடும் சிறார்கள் திருந்தி, புதிய வாழ்வைத் தொடங்குவதற்கான இடமாகக் கூர்நோக்கு இல்லங்கள் இருக்கும் என்கிற நம்பிக்கையை இதுபோன்ற சம்பவங்கள் முற்றிலும் தகர்த்துவிடுகின்றன. இதுபோன்ற மையங்களில் அடைக்கப்பட்டிருப்பவர்களே ஒருகட்டத்தில் காவலாளி, பாதுகாவலர் ஆகிய பணிகளில் அமர்த்தப்படுகிறார்கள். அவர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்கப்படுவதில்லை. சிறாருக்கு மனநல ஆலோசனை வழங்கவும் ஆற்றுப்படுத்தவும் வழிகாட்டவும் பயிற்சிபெற்ற நிபுணர்கள் நியமிக்கப்படுவதில்லை.

அரசு நிர்வகிக்கும் குழந்தைகள் பாதுகாப்பு மையங்களில் கல்வியைத் தொடரும் வசதி, தொழிற்பயிற்சி வகுப்புகள், யோகா உள்ளிட்ட பல ஏற்பாடுகள் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், அவை செயல்படும் விதம் முறையாகக் கண்காணிக்கப்படுகிறதா என்பது முக்கியமான கேள்வி. கொடுமை தாள முடியாமல் கூர்நோக்கு இல்லங்களிலிருந்து சிறார் தப்பிச்செல்லும் சம்பவங்கள் கடந்த 10 ஆண்டுகளில் அதிகரித்திருக்கின்றன. காவல் நிலையங்கள், சிறைக்கூடங்கள் தொடங்கி சிறார் கூர்நோக்கு இல்லங்கள் வரை மனித உரிமை மீறல்கள் நடப்பதை மௌனமாகக் கடந்துசென்றுவிட முடியாது. அரசு உரிய, உறுதியான நடவடிக்கைகளை உடனே எடுத்தாக வேண்டும்!

82



# Felled by the protectors

**The death of a 17-year-old boy 'in custody' at the government-run observation home in Chengalpattu is a grim reminder of the gruesome Sathankulam custodial deaths. His death due to alleged torture also exposed the lacunae in the correctional system and rehabilitation homes for children who come in conflict with the law**

**R. Sivaraman**

For the mother of the 17-year-old boy who died in December last after being allegedly beaten by the authorities in an observation home where he was lodged, the grief is unending. He was her only hope after her husband died four years ago. Five other children – two sons and three daughters, aged between 5 and 14 – are dependent on her earning by working as a watch-woman at a pump house nearby.

Her soon-to-be-adult son could not study further and started supporting his family by working at a toyshop at the Kundrathur bus stand. He used to give the family ₹2,000 a month. He was returning home by train after visiting a friend on December 29. The Railway Protection Force apprehended him on suspicion at 10.30 p.m. The mother was informed by the police the next day.

At the police station, she was led to a room. Recalling her son's last words to her, she said, "He pleaded with me to take him away as soon as possible. He cried that he would listen to me and be obedient. I told him that I would take him out (on bail) after Pongal; we spoke for one and a half hours. At that point, there were no injuries on his body. Again, while being taken to the observation home at Chengalpattu, he told me to take him out (on bail) as quickly as possible."

Police sources said the boy was secured by the Railway Protection Force, Tambaram, as he was allegedly involved in a theft. He was taken to the District Juvenile Justice Board and then kept at the observation home, housed on the same campus as the special home, at Chengalpattu on the night of December 30.

### Call from a warden

"The next evening, I got a call from a person who is a warden of the observation home, informing me that my son had a seizure after having 'poori' and buttermilk. The caller said they were taking him in a two-wheeler to the Government General Hospital, Chengalpattu, and asked me to rush there. Before I reached the nearby bus stand from my house in 10 minutes, I got another call informing me that my son was admitted to the emergency ward. Again, after 10 minutes later, the caller informed me that my son had died," she said.

She alleged that she was not allowed to enter the hospital since it was late at night. When she reached the observation home, a staff member took her on a bike telling her that she could visit her son the next day. She was then forcibly made to stay at the home of a woman staff member's relative, the mother claimed. "I was taken by the

> Based on the post-mortem report and the judicial magistrate's inquiry, we have arrested six of the staff members on charges of murder. Our investigation revealed that the boy was beaten by the staff inside the home
>
> **A. PRADEEP,** Chengalpattu SP

nose and the lower lip, and other injuries on the chest. It seemed that my son was brutally beaten inside the home," she said.

She said she was forcibly taken by the staff of the observation home to the place where she was staying earlier and kept there against her will. She also claimed that she was threatened to sign on blank papers, which she refused. She managed to slip away from the hospital and from the eyes of the staff and took an autorickshaw to the Collector's office to call for an investigation into "foul play" in her son's death.

After a post-mortem was done three days later, she cremated the body at Chengalpattu on January 3. She said, "They murdered my son. I want to ensure that this should not be happen to any other child."

"Based on the post-mortem report and the judicial magistrate's inquiry, we have arrested six of the staff members on charges of murder. Our investigation revealed that the boy was beaten by the staff inside the home," said Chengalpattu SP A. Pradeep.

The police arrested S. Mohan, 30, superintendent; P. Vidyasagar, 33, assistant superintendent; J. Honest Raj, 29, barber; D. Vijayakumar, 30, warden; M. Saravanaraj, 36, warden; and R. Chandrababu, 35, house master.

### 'A case of custodial torture'

I. Aseer, State coordinator of Joint Action against Custodial Torture, said, "Our fact-finding team confirmed that this is a clear case of custodial torture in the Chengalpattu observation home where more than 120 children stay. This incident can be termed worse than the custodial deaths in Sathankulam reported in 2020. The entire incident shows that the staff believe that violence should be used to reform children."

Vidya Reddy, of Tulir-Centre for Prevention and Healing of Child Sexual Abuse, asked how the death of the boy in Chengalpattu is different from the deaths that have happened in police custody elsewhere in Tamil Nadu. "The difference is while one situation involved the police, the other involved personnel who are supposedly employed because they have the requisite knowledge, training and skills to address children in difficult situations," she said.



Stating that it was largely socio-economically disadvantaged youths that are in the juvenile justice system, Ms. Vidya said there was a lack of a safety net to ensure that vulnerable children did not get into transgressions. This death could not be considered just another unfortunate death, but there was an urgent need to address the systemic flaws.

The tragic incidents expose the lacunae in the management of observation homes meant for temporary reception of juveniles who are in conflict with law. They will be kept at these homes during pendency of inquiry. Later, they will be shifted to special homes which provide for their rehabilitation. Though the Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015, provides for establishment and maintenance of observation homes and special homes in every district, there are only nine observation homes and two special homes run by the government.

The juvenile justice system comprises agencies such as the police, the juvenile justice boards and institutions such as observation homes and special homes. The police are the first agency which handles a juvenile in conflict with law. The juvenile justice boards are functioning under judicial officers and two social workers. The government has constituted 32 juvenile justice boards covering 38 districts. As many as 2,367 cases were handled during 2021-22.

A senior police woman officer said, "Though we send a juvenile to an observation home for a petty offence, they repeat the offence after learning from peers to commit a more serious offence and keep coming back."

> There is no dedicated psychologist/counsellor on a continuous basis for those admitted to observation homes to deal with the stress and anxiety of a juvenile
>
> **PAADAM A. NARAYANAN** Social activist

In the last one decade, there have been several instances of torture, ill-treatment and children running away. The insiders of these homes disclose a series of lacunae in the administration and a lack of infrastructure.

After efforts over the years, the observation homes and the special homes continue to remain a 'minor jail' in reality. Though the nomenclature has changed, the attitude and behaviour of the staff at these homes have not changed. The children lack education, entertainment and are isolated from the outside world. Rehabilitation facilities are very poor and psychological counselling and treatment are practically non-existent in many homes, says A. Devaneyan, director of Thozhamai.

### No increase in staff strength

All these homes under the Department of Social Defence (DSD) were started much before 1980. So far, the staff strength has not increased and the staff members have not been trained to suit the needs of the current generation.

The activists point out that the observation home for boys is overcrowded in Tiruchi because the authorities did not create additional space. No staff member was deployed to the observation home which was taken over by the government from an NGO; conditions have worsened and juveniles are locked in a single hall like a pri-

Thanjavur, the observation home and the special home are at the same place.

Former inmates of these homes are given the jobs of matron, sanitary worker, watchman, and guards within the system without training or screening. Former inmates are given jobs as staff members as part of rehabilitation. No trained people are available and the atmosphere there is not congenial for children, said M.P. Nirmala, former chairperson of the Tamil Nadu Commission for Protection of Child Rights (TNCPCR).

Social activist Paadam A. Narayanan said, "There is no dedicated psychologist/counsellor on a continuous basis for those admitted to observation homes to deal with the stress and anxiety of a juvenile; no positive recreation or sports to divert his mind from conflicts and aggression. It needs a lot of patience and understanding to deal with children in conflict with law. Observation home staff are unqualified and poorly trained. They often resort to violence to control the children admitted to observation homes."

A member of the juvenile justice board said, "In a southern district, a couple of months ago, a 10-year-old boy was brought in for remand at 1 p.m. on the charge that he had stolen a mere ₹10. The boy was chased away by his father as his stepmother did not like him. A priest of a temple where he took shelter for two days asked him to buy a bun for ₹10. Since he was hungry, the boy ate the bun. After a quarrel, the boy was picked up by the police for stealing ₹10. If the child had access to shelter and food, why would he steal? The system will bring him to the observation home where he will meet people who have committed grave crimes."

With observation homes typically being short-stay homes, activists have wondered whether effective interventions are implemented there.

### One day at a home

What does a day look like for children in an observation home? "Children who are dropouts have to attend classes in the mornings and can participate in activities such as sports, music, dance or yoga in the evenings. How effectively these activities are implemented depends on the superintendent there and the efforts made by them at each home," said an official of the DSD.

In the last few months, the Tamil Nadu government has announced structured intervention programmes for child-care institutions. In November 2022, orders were issued for modernised vocational training programmes which included making of bakery products, air-conditioner servicing, plumbing, fast food preparation, home appliance servicing and tailoring.

In December last, the DSD passed orders for a collaboration with the Tamil Nadu Startup and Innovation Mission (TANSIM) where children of government-run child-care institutions would undergo skill-development programmes.

"The focus going forward would be on mental health literacy and training for staff members in these institutions. We are trying to bring about an attitudinal change among guards, wardens and matrons at these institutions, and sensitise them to the need for communicating better with the children," she added.

In the aftermath of this incident, a senior official of the DSD said that the periodic monitoring of observation homes and special homes by district officials as well as officials of the headquarters would be strengthened. At the district level, the committees formed by the district administration are required to carry out periodic inspections.

Earlier this week, all observation and special homes in the State were inspected and a report was prepared by the DSD to be submitted to the government. While the Department has suspend-

 83

# அரசு கூர்நோக்கு இல்ல சிறுவன் மரணத்தை மறைக்க தாயை கடத்தியதாக குற்றச்சாட்டு: நடந்தது என்ன?

**கட்டுரை தகவல்**


- எழுதியவர்,பிரமிளா கிருஷ்ணன்
- பதவி,பிபிசி தமிழ்

- 19 ஜனவரி 2023



படக்குறிப்பு,
இறந்த சிறுவனின் தாயார் பிரியா

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசு சிறார் கூர்நோக்கு இல்லத்தில் இறந்த சிறுவனின் தாயார், தனது மகனின் இறப்பை மறைக்க அதிகாரிகள் தன்னை மூன்று நாட்கள் பல இடங்களுக்கு கடத்தி சென்று, தன்னிடம் சமரசம் பேசி வற்புறுத்தியதாக குற்றம்சாட்டியுள்ளார். சிறுவனின் இறப்பு தொடர்பாக கூர்நோக்கு இல்லத்தைச் சேர்ந்த ஐந்து அதிகாரிகள் இதுவரை கைதாகியுள்ளதாக செங்கல்பட்டு மாவட்ட காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**என்ன நடந்தது?**

மேற்கு தாம்பரம் குப்பைமேடு பகுதியில் வசிப்பவர் பிரியா(37). கடந்த ஆண்டு டிசம்பர் மாத கடைசி வாரத்தில், சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் இருந்த தனது மகன் (17) இறந்துவிட்டதாக தகவல் வந்ததும் நொறுங்கிப்போனார். தனது மகனின் இறப்பு குறித்து கேள்வியெழுப்பியதும் கூர்நோக்கு இல்ல அதிகாரிகள் தன்னை கடத்திச் சென்று பல இடங்களில் தங்கவைத்தது, அச்சம் மிகுந்த அனுபவமாக இருந்தது என்கிறார் பிரியா.

84

மகன் இறந்த சோகத்தில் இருந்து அவர் மீளவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் பிரியாவின் கணவர் சிறுநீரக பிரச்னை காரணமாக இறந்துள்ளார். தனது மகன் வளர்ந்துவிட்டதால், குடும்பத்திற்காக அவனது உழைப்பு இனி தேவைப்படும் என்ற நேரத்தில் நேர்ந்த இறப்பை பிரியாவால் தாங்கமுடியவில்லை.

"ரயில்வே லைனில் பேட்டரியை திருடியதாக என் மகனை கடந்த டிசம்பர் 30ம் தேதி கைது செய்து கொண்டுபோனார்கள். டிசம்பர் 31ம் தேதி இரவு என் மகன் இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். அங்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. மர்மமாக உள்ளது. முதலில் அவனுக்கு உடல்நிலை சரியில்லை, வலிப்பு வந்துவிட்டது என்றார்கள், நான் கிளம்பி வருகிறேன் என்று சொன்னதும், சிறிது நேரத்தில் எனக்கு போன் செய்துவிட்டு, மகன் எமெர்ஜென்சி வார்டில் இருக்கிறான் என்றார்கள். பதட்டம் அதிகரித்துவிட்டது. என் வீட்டுக்கு அப்போது போலீஸ் வந்தார்கள், ஏன், எதற்கு என்று புரியவில்லை. அடுத்த சில நொடிகளில், என் மகன் இறந்துவிட்டான் என்றார்கள்," என விவரிக்கும்போது பிரியாவின் கண்கள் குளமாகின.

இரவு நேரத்தில் மகனின் உடலை பார்க்கச் சென்ற பிரியாவுக்கு அடுத்தடுத்து அதிர்ச்சியான அனுபவங்கள் ஏற்பட்டன என்கிறார். முதலில் மருத்துவமனை வாசலில் இருந்து அவரை கூட்டிச்சென்றவர்கள், சில நிமிடங்கள் உடலை காட்டிவிட்டு, அவரை ஒரு ஆட்டோவில் வைத்து ஒரு பெண்ணின் வீட்டுக்கு அழைத்துச்சென்றதாகவும், பின்னர் பல்வேறு இடங்களுக்கு வலுக்கட்டாயமாக தன்னை கூட்டிச்சென்றதாகவும் சொல்கிறார்.

"இரண்டு பெண்கள் என்னுடன் வந்தார்கள், அதிகாரிகள் என்னை அவர்களுடன் போகச் சொன்னார்கள். காலையில்தான் உடலை தரமுடியும் என்றார்கள். என்னுடைய மற்ற இரண்டு குழந்தைகள் மருத்துவமனை வாசலில் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களைகூட பார்க்க அனுமதிக்கவில்லை. என்னை இரவோடு இரவாக பல இடங்களுக்கு கூட்டிச்சென்றார்கள். மூன்று நாட்கள் வேறு வேறு இடங்களுக்கு கூட்டிச்சென்றார்கள். அந்த கூர்நோக்கு இல்லத்தைச் சேர்ந்த பெரிய அதிகாரிகள் என்னை மிரட்டினார்கள், மூன்றாவது நாள் நான் சத்தம் போட்டு கத்தவே என்னை விட்டுவிட்டார்கள்," என்கிறார் பிரியா.

**விசாரணை நடைபெறுகிறது**

85

பிரியாவின் குற்றச்சாட்டுகள் குறித்து செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப்பிடம் பேசியபோது, சிறுவனின் உடற்கூராய்வு அறிக்கையில் அவனது உடலில் பல காயங்கள் இருந்தன என்றார்.

"செங்கல்பட்டு குற்றவியல் நீதிமன்ற விசாரணை அறிக்கை மற்றும் உடற்கூராய்வு அறிக்கை ஆகிய இரண்டையும் அடிப்படையாகக்கொண்டு கூர்நோக்கு இல்லத்தைச் சேர்ந்த ஐந்து அதிகாரிகளை கைது செய்துள்ளோம். பிரியா பல குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார். பிரியாவை கடத்தியது தொடர்பாக தனி வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை. சிறுவனின் இறப்பு பற்றிதான் இப்போது விசாரணை செய்கிறோம்," என்கிறார்.

பிரியாவின் சட்ட போராட்டத்திற்கு உதவ மதுரையைச் சேர்ந்த மக்கள் கண்காணிப்பகம் என்ற தொண்டு நிறுவனம் முன்வந்துள்ளது. பிபிசி தமிழிடம் பேசிய மக்கள் கண்காணிப்பகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஹென்றி திபேன், பிரியாவை கூர்நோக்க இல்ல அதிகாரிகள் நடத்தியவிதம் மனித உரிமைகளுக்கு எதிரானது என்கிறார்.

**'தாய் கடத்தப்பட்டதை தனி வழக்காக விசாரிக்க வேண்டும்'**

"தாயார் பிரியாவை மூன்று நாட்கள் பல இடங்களுக்கு கூட்டிச்சென்றுள்ளார்கள். இதனை தனி வழக்காக விசாரிக்கவேண்டும். செங்கல்பட்டு அரசு கூர்நோக்கு இல்லத்தில் பலவிதமான கொடுமைகள் நடந்துள்ளன. பிரியாவின் மகன் இறந்த சம்பவம் வெளியில் தெரியவந்துள்ளது. இதற்கு முன்னர் பல குழந்தைகள் அங்கிருந்து தப்பியுள்ளார்கள். அந்த இல்லத்தில் இருந்த குழந்தைகளிடம் அவர்களை பாதிக்காதவகையில் விசாரணை செய்து உண்மையை வெளிக்கொண்டுவரவேண்டும்," என்கிறார்.

இறந்த சிறுவன் உட்பட கடந்த இரண்டு மாதங்களில் 20 சிறுவர்கள் அந்த இல்லத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதில் இறந்த சிறுவனின் அறையில் தங்கியிருந்த ஒரு சிறுவன் இரண்டு நாட்களுக்கு முன்னர் ஜாமீனில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகப் பெயர் சொல்ல விரும்பாத சமூகநலத்துறை அதிகாரி ஒருவர் பிபிசி தமிழிடம் தெரிவித்தார்.

"இந்த சிறுவன் மோசமாக தாக்கப்பட்டுள்ளான் என்பதற்கான ஆதாரங்கள் உடற்கூராய்வில் தெரியவந்துள்ளன. மேலும் இங்கிருந்த சிறுவர்களிடம் பேசிவருகிறோம். விசாரணை நடைபெற்றுவருவதால் பிற தகவல்களைச் சொல்லமுடியாது,"என்றார் அந்த அதிகாரி. கடைசியாக பேட்டியை முடித்துக்கொண்டு நாம் கிளம்பும் நேரத்தில் நம்மிடம் வந்த பிரியா, "அந்த ஹோம்ல நிறைய பசங்க இருக்கிறாங்க.. என் பயனுக்கு நடந்த மாதிரி யாருக்கும் நடக்ககூடாது. அந்த பசங்க பாதுகாப்பாக இருக்கனும்.. எனக்கு நீதி கிடைக்குமில்ல?,"என்றார்.

**https://www.bbc.com/tamil/articles/crgv1r30r3po**

# சீர்திருத்த பள்ளியில் சிறுவன் மர்மச்சாவு: மகனை அடித்து கொன்றதாக தாய் கலெக்டரிடம் புகார் மனு




**தினத்தந்தி**
ஜனவரி 3, 3:12 pm

செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த பள்ளியில் சிறுவன் மர்மச்சாவு அடைந்த சம்பவத்தில் மகனை பாதுகாவலர்கள் அடித்து கொன்றதாக கலெக்டர் அலுவலகத்தில் தாய் புகார் மனு அளித்துள்ளார்.

செங்கல்பட்டு
திருட்டு வழக்கில் கைது

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த கன்னடபாளையம் பகுதியை சேர்ந்த 17 வயதுடைய சிறுவன் கடந்த மாதம் தாம்பரம் ரெயில்வே குடியிருப்பில் ரெயில்வே துறைக்கு சொந்தமான பேட்டரி ஒன்றை திருடியதாக கூறி ரெயில்வே போலீசாரால் கைது செய்யப்பட்டார். இதையடுத்து கடந்த 29-ந்தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சிறுவனை செங்கல்பட்டில் உள்ள சிறுவர் சீர்திருத்த பள்ளியில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதனை அடுத்து சிறுவர் சீர்திருத்த பள்ளியில் அடைக்கப்பட்ட சிறுவன் கடந்த 31-ந் தேதி திடீர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான்.

சாவில் மர்மம் புகார்

அங்கு சிறுவனை பரிசோதித்த டாக்டர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். அதைத்தொடர்ந்து சிறுவனின் உடல் பிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்நிலையில் மகனின் சாவில் மர்மம் இருப்பதாக அவரது தாய் செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளார். அந்த புகார் மனுவில், கடந்த மாதம் 29-ந்தேதி தனது மகனை தாம்பரம் ரெயில்வே போலீசார் அழைத்துச் சென்று சீர்த்திருத்த பள்ளியில் அடைத்தபோது, நலமுடன் இருந்ததாகவும், தனது மகனை சிறுவர் சீர்திருத்தப்பள்ளியில் உள்ள பாதுகாவலர்கள் அடித்து கொலை செய்து விட்டதாகவும் குற்றம்சாட்டி உள்ளார்.

நீதிபதி ஆய்வு

மேலும் சிறுவனின் உடலில் பலத்த காயங்கள் இருந்ததாகவும், இது குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். முன்னதாக செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்ட சிறுவன் உடலை செங்கல்பட்டு குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி ரீனா பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதனையடுத்து இன்று (செவ்வாய்க்கிழமை) சிறுவனின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்படுகிறது.



# சிறுவர் கூர்நோக்கு இல்லங்களில் முறைகேடுகள் குறித்து விசாரிக்க வேண்டும்

## பாலகிருஷ்ணன் வலியுறுத்தல்

தாம்பரம், ஜுன.23-

செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த பள்ளியில் கோகுல் ஸ்ரீ என்ற சிறுவன் அடித்துக்கொலை செய்யப்பட்டான். சென்னையை அடுத்த தாம்பரம் கன்னட பாளையத்தில் உள்ள சிறுவன் கோகுல் ஸ்ரீயின் இல்லத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநிலச்செயலாளர் பாலகிருஷ்ணன், நேரடியாக சென்று சிறுவனின் தாயாரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது:-

செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கோகுல் ஸ்ரீ கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்ய வேண்டும். சிறுவனின் தாயாரை 2 நாட்கள் அடைத்து வைத்து மிரட்டியதுடன், பிரேத பரிசோதனையையும் 2 நாட்களுக்கு மேல் தாமதப்படுத்தி வழக்கை மூடி மறைக்க திட்டமிட்டு செயல்பட்ட அனைவர் மீதும் வழக்குப்பதிவு செய்து கைது செய்ய வேண்டும். குற்றவாளிகள் தப்பி விடாமல் இந்த வழக்கை முறையாக நடத்தி தண்டனை பெற்று தரவேண்டும்.

கோகுல் ஸ்ரீயின் தாயார் கணவனை இழந்து, நிரந்தர வருமானம் இல்லாமல் 5 குழந்தைகளை பராமரிக்க வேண்டிய நிலையில் உள்ளார். கோகுல் ஸ்ரீயின் வருமானத்தை நம்பி இருந்த குடும்பம். எனவே தமிழக முதல்-அமைச்சர் இவரது குடும்பத்துக்கு ரூ.50 லட்சம் நிவாரணமும், வசிப்பதற்கு வீடு மற்றும் அரசு வேலையும் வழங்குவதோடு, அவரது குழந்தைகள் அரசு பள்ளியில் படிப்பதற்கான வசதிகளையும் செய்து தர வேண்டும்.

செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் பல சிறுவர்கள் அடித்து சித்ரவதைக்கு உள்ளாக்கப்படுவதாக தெரிகிறது. செங்கல்பட்டு உள்பட தமிழகத்தில் உள்ள அனைத்து சிறுவர் கூர்நோக்கு இல்லங்களில் நடக்கும் முறைகேடுகள் குறித்து முழுமையான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

90

செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த பள்ளியில்

# மர்மமான முறையில் உயிரிழந்த சிறுவனின் உடல் தகனம்

செங்கல்பட்டு, ஜன.4: செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் அடுத்த கன்னடபாளையம் பகுதியை சேர்ந்தவர் பழனி இவருக்கு திருமணமாகி நிர்மலா என்கிற மனைவியும் 3மகன்களும், 3மகள்களும் உள்ளனர். இதில், மூத்த மகனான கோகுல்ஸ்ரீ (17) என்பவர் தாம்பரம் ரயில் நிலையத்தில் ரயில்வே துறைக்கு சொந்தமான பேட்டரியை திருடியதாக ரயில்வே போலீசார் அவரை கைது செய்து கடந்த 29ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த பள்ளியில் தாம்பரம் ரயில்வே போலீசாரால் ஒப்படைக்கப்பட்டார்.

இந்நிலையில், கடந்த 31ம் தேதி திடீரென கோகுல் ஸ்ரீக்கு வலிப்பு மற்றும் வாந்தி பேதி ஏற்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். தொடர்ந்து உடல் பிரேத பரிசோதனைக்காக பிணவறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.



கோகுலின் இறப்பில் மர்மம் இருப்பதாக, அவரது தாய் நிர்மலா செங்கல்பட்டு கலெக்டர் அலுவலகத்தில் புகார் மனு அளித்தார். அதனை தொடர்ந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் இருந்த கோகுல் ஸ்ரீயின் உடலை செங்கல்பட்டு குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி ரீனா பார்வையிட்டு வீடியோ பதிவுடன் கூடிய உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டது பின்னர், உடல் நிர்மலாவிடம் ஒப்படைக்கப்பட்டது. தனது மகனின் உடலை தாம்பரம் கொண்டு சென்று அடக்கம் செய்ய என்னிடம் பணமும் எனக்கு அந்தளவிற்கு உறவினர்களும் இல்லை என அவர் கூறினார்.

இதையடுத்து, அவரது உடல் செங்கல்பட்டு அருகே உள்ள பழவேலி மயானத்தில் நிர்மலா அவரது இளைய மகன் மற்றும் மகள் முன்னிலையில் தகனம் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் நிர்மலா கூறுகையில், 'சீர்திருத்த பள்ளியை சேர்ந்தவர்கள் அடித்ததால் என் மகன் உயிரிழந்தான். அவனது ஒரு பல் உடைந்துள்ளது. கை, கால் பகுதிகளில் அடித்ததற்கான தழும்புகள் உள்ளது. எனவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எனக்கு பணமேதும் தேவையில்லை. என் மகன் சாவிற்கான நீதி கிடைத்தால் போதும்' என்றார்.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில்

# சிறுவர் கூர்நோக்கு இல்லங்களை ஆய்வு செய்ய வேண்டும்

## அனைத்து கட்சி கூட்டத்தில் தீர்மானம்

செங்கல்பட்டு, ஜன.19: செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் கடந்த மாதம் 30 தேதியன்று கோகுல் ஸ்ரீ (17) சிறுவன் காவலர்களால் அடித்து சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டான். இது சம்பந்தமாக சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் பணி புரியும் காவலர்கள் ஆறு பேரை கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். இதில் சாட்சியை மறைப்பதற்காகவும், புகாரை வாபஸ் வாங்க நிர்ப்பந்தம் செய்தும், கொலையான சிறுவனின் அம்மாவை கடத்தி அடைத்து வைத்து மிரட்டியதில், செங்கல்பட்டு மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் சிவக்குமார் மற்றும் இவருக்கு துணைபுரிந்தவர்கள் மீதும் வழக்குபதிவு செய்து நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தியும் செங்கல்பட்டில் மார்க்சிஸ்ட் கட்சியின் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் ப.சு.பாரதி அண்ணா தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் நேற்று நடந்தது.

இதில், திமுக நிர்வாகி ராஜு வரவேற்றார். காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டு இயக்கத்தின் நிர்வாகி ஆசீர் கூட்டத்தை ஒருங்கிணைத்தார். மதிமுக நிர்வாகி கே.பி.ராமலிங்கம், மமக நிர்வாகி யூனுஸ், மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் இ.சங்கர் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினர்.

இந்த கூட்டத்தில், காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, திராவிடர் கழகம், தமிழின உணர்வாளர்கள் கூட்டமைப்பு, மக்கள் தமிழகம் கட்சி, தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழு, குழந்தைகள் உரிமைக்கான தோழமை கூட்டமைப்பு, தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் கண்காணிப்பகம், அறக்கட்டளை மக்கள் கண்காணிப்பகம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புகள் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கோகுல்ஸ்ரீ கொலை வழக்கில் குற்றத்தில் ஈடுபட்ட ஆறு நபர்களை கைது செய்து நடவடிக்கை எடுத்த முதலமைச்சர், சமூக நலத்துறை அமைச்சர் ஆகியோருக்கு அனைத்துக்கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகள் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்தகூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்: செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கோகுல்ஸ்ரீ கொலைக்குப் பின்பு, கொலைக்கான சாட்சியத்தை மறைக்கும் நோக்கத்தில் சிறுவனின் அம்மாவை கடத்தி சித்திரவதை செய்து மிரட்டிய மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்புக்குழு பொறுப்பு அலுவலர் சிவக்குமார் மற்றும் அவருக்கு துணை புரிந்த அனைவரையும் விசாரணைக்கு உட்படுத்தி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கோகுல்ஸ்ரீ படுகொலைக்குப் பின்பு இணை இயக்குநர் கொடுத்த விசாரணை அறிக்கையை மறைத்து குற்றத்தில் ஈடுபட்டவர்களை பாதுகாக்கும் நோக்கத்தில் செயல்பட்ட சமூகநலத்துறையின் இயக்குநர் வளர்மதியின் செயல்பாட்டை வன்மையாக கண்டிக்கப்படுகிறது.

இவர் மீது தமிழ்நாடு அரசு துறை சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கோகுல்ஸ்ரீ கொலை வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளை பாதுகாப்பதற்காக உயர் மட்ட அலுவலர்கள், மறைமுகமாக தலையீடு செய்து வருகின்றனர். இதனால், சிறுவன் கோகுல்ஸ்ரீ படுகொலை வழக்கு அதிகாரம் படைத்தவர்களால் நீர்த்துப் போகச்செய்ய வாய்ப்புள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு இந்த வழக்கினை சிறப்புப் பிரிவான சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். கொலை செய்யப்பட்ட சிறுவனின் குடும்பம் மிகவும் வறுமைத் துயரில் வாடுகிறது. குறிப்பாக அப்பா இறந்துவிட்டார். அம்மா மற்றும் ஐந்து குழந்தைகள் உள்ளனர்.

இவர்களுக்கு குடியிருக்க வீடு இல்லாமல் குப்பைமேட்டு அருகில் ஒரு குடிசையில் வாழ்ந்து வருகிறார்கள். எனவே பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு குடியிருக்க தமிழ்நாடு முதல்வர் வீடு வழங்க வேண்டும். சிறுவனின் அம்மாவிற்கு அரசு வேலை வழங்க வேண்டும். சிறுவன் கோகுல்ஸ்ரீ படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தொடர்புடைய அனைவரையும் விசாரணைக்கு உட்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தில் அனைத்து கட்சிகள் சார்பில் செங்கல்பட்டு மாவட்ட கலெக்டரை சந்தித்து மனு கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

செங்கல்பட்டு சிறார் கூர்நோக்கு இல்லத்தில் உள்ள சிறுவர்களை தாக்கப்படுவது, சித்திரவதை செய்யப்படுவது தொடர்ந்து நடந்து வருகிறது. எனவே, இதுபோன்ற சிறுவர்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நிரந்தரமாக தடுக்கப்படவேண்டும்.

செங்கல்பட்டு சிறார் கூர்நோக்கு இல்லம் உட்பட தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறார் கூர்நோக்கு இல்லங்களையும் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்து ஆய்வு செய்து, அறிக்கையின் அடிப்படையில் அனைத்து சிறார் கூர்நோக்கு இல்லங்களையும், பாதுகாப்பான சிறார் இல்லங்களாக மாற்றி அமைக்கப்படவேண்டும்.

இதனை வலியுறுத்தி செங்கல்பட்டில் ஜனவரி 21 அன்று கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் அனைத்து கட்சிகளின் சார்பில் நடத்துவதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கொலை

# கொலையாளிகளை கைது செய்யக்கோரி முதல்வருக்கு கே.பாலகிருஷ்ணன் கடிதம்

**சென்னை, ஜன. 23:** செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் கொலை செய்யப்பட்ட சிறுவனின் கொலை வழக்கில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்ய வேண்டும் என தமிழ்நாடு முதல்வருக்கு கே. பாலகிருஷ்ணன் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் முதல்வர் மு.க ஸ்டாலினுக்கு எழுதியுள்ள கடிதம்:

செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கோகுல்ஸ்ரீ கடந்த 31.12.2022 அன்று சித்ரவதை செய்து கொலை செய்யப்பட்டுள்ளான். இந்த கொலை வழக்கில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொலை வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள அனைவரையும் கைது செய்வதுடன், சிறுவனின் தாயாரை இரண்டு நாட்கள் அடைத்து வைத்து மிரட்டியதுடன் பிரேத பரிசோதனையும் இரண்டு நாட்களுக்கு மேல் தாமதப்படுத்தி இவ்வழக்கை மூடி மறைக்க, திட்டமிட்டு செயல்பட்ட அனைவர் மீதும் வழக்கு பதிவு செய்து கைது செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். குற்றவாளிகள் தப்பி விடாமல் இந்த வழக்கை முறையாக நடத்தி தண்டனைப் பெற்று தந்து உதவி செய்து தர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



சிறுவன் கோகுல்ஸ்ரீயின் தாயார் கணவனை இழந்தவர். நிரந்தர வருமானம் இல்லாமல், 5 குழந்தைகளை பராமரிக்க வேண்டிய பெரும் சிரமத்தில் வாழ்ந்து வருபவர்.

இறந்து போன கோகுல்ஸ்ரீயின் வருமானத்தை நம்பியிருந்த குடும்பமாகும். எனவே, தமிழக முதல்வர் இவரது குடும்பத்திற்கு ₹50 லட்சம் நிவாரணமும், வசிப்பதற்கு அரசு வீடும், அரசு வேலையும், இவரது குழந்தைகள் அரசு பள்ளியில் படிப்பதற்கான வசதிகளையும் செய்து தரவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

18.01.2022

93

# அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் சிறப்பு விசாரணைக் குழு அமைக்க வலியுறுத்தல்

மதுரை, ஜன. 18: செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கொலை செய்யப்பட்டதன் எதிரொலியாக, அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் மூத்த பெண் வழக்குரைஞர்கள் தலைமையில் ஆய்வு நடத்தி, சிறப்பு விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்தியது.

மதுரையில் மக்கள் கண்காணிப்பகத்தின் நிர்வாக இயக்குநர் ஹென்றி திபேன் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியதாவது:

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் 17 வயதான சிறுவன் கடந்த மாதம் 31 -ஆம் தேதி அங்குள்ள ஊழியர்களால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இதுதொடர்பாக, 176 (1ஏ) சட்டப் பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், சிறுவனின் தாய் கடந்த 11 -ஆம் தேதி அளித்த புகாரின் பேரில், மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் விரைந்து நடவடிக்கை எடுத்து கொலை வழக்காகப் பதிவு செய்து, ஊழியர்கள் 7 பேரை கைது செய்தது.

இந்தச் சம்பவத்தில் சிறுவனின் தாயை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சிவக்குமார் கடத்திச் சென்று புகார் அளிக்கவிடாமல் அடைத்து வைத்ததால், புகார் அளிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதுதொடர்பாக மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் சிவக்குமார் மீதும் புகார் அளிக்கப்பட்டது. அவர் தற்போது வரை கைதுசெய்யப்படவில்லை. அவரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும்.

மேலும், இதுதொடர்பாக செய்திகள் வெளியான நிலையில், சமூக நீதித் துறை அதிகாரி வளர்மதி செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்துக்கு இரண்டு வாரம் தாமதமாக கடந்த 14-ஆம் தேதி சென்று விசாரித்தார். ஆனால், இதுவரை விசாரணை அறிக்கையை அவர் தாக்கல் செய்யவில்லை. மேலும், கூர்நோக்கு இல்லத்தில் நடக்கும் சித்திரவதைகளுக்கு காரணமான நபர்களையே உடன் அழைத்துச் சென்றுள்ளார். கூர்நோக்கு இல்லத்துக்குச் சென்று உயர்நீதிமன்றம் பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. இவை எதுவும் பின்பற்றப்படவில்லை.

செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்துக்கு அரசு சார்பில் வாகனம் வழங்கப்பட்டிருந்தும், தாக்குதலில் உயிரிழந்த சிறுவனின் சடலத்தை அவசர ஊர்தியில் கொண்டு செல்லாமல் இரு சக்கர வாகனத்தில் கொண்டு சென்றனர். இதுதொடர்பாக அரசு விசாரணை நடத்த வேண்டும். மேலும், செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லம் மட்டுமன்றி, தமிழகம் முழுவதும் உள்ள கூர்நோக்கு இல்லங்களில் சிறுவர்கள் சித்திரவதைப்படுத்தப்படுகின்றனர்.

எனவே, உயர்நீதிமன்ற மூத்த பெண் வழக்குரைஞர்கள் தலைமையில் சிறப்பு விசாரணைக் குழு அமைத்து, அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் விசாரணை நடத்த அரசு உத்தரவிட வேண்டும். இந்தக் குழுவில் மருத்துவர்களும் இடம் பெற வேண்டும்.

சிறுவனின் தாய் கணவரை இழந்தவர். இவருக்கு மேலும் 5 குழந்தைகள் உள்ள நிலையில், அவர்களை மிகவும் சிரமப்பட்டு வளர்த்து வருகிறார். எனவே, கூர்நோக்கு இல்லத்தில் காவல் மரணம் ஏற்பட்டுள்ளதால், சிறுவனின் குடும்பத்துக்கு ரூ. 10 லட்சம் இழப்பீடும், அவரது தாய்க்கு அரசு வேலையும் வழங்க வேண்டும்.

சிறுவனின் மரணம் தொடர்பாக நீதி விசாரணைக்கு அரசு உத்தரவிட்டு, இதில் தொடர்புடையவர்கள் மீதும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

# சிறுவன் கொலை வழக்கில் தொடர்புடையவர்களை கைது செய்ய மார்க்சிஸ்ட் கோரிக்கை

94



செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் கொலையுண்ட சிறுவன் கோகுல்ஸ்ரீயின் தாயார் பிரியாவை ஞாயிற்றுக்கிழமை சந்தித்து ஆறுதல் தெரிவித்த மார்க்சிஸ்ட் மாநிலச்செயலர் கே.பாலகிருஷ்ணன்.

தாம்பரம், ஜன22: செங்கல்பட்டு சிறுவர்கூர்நோக்கு இல்லத்தில் கொலை செய்யப்பட்ட சிறுவன் கோகுல்ஸ்ரீ கொலை வழக்கில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்ய வேண்டும் என மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அவர் ஞாயிற்றுக்கிழமை எழுதியுள்ள கடிதம்: செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கோகுல்ஸ்ரீ கடந்த டிச.31-இல் சித்ரவதை செய்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்த கொலையை மறைக்க கூர்நோக்குமேலாளர் மற்றும் மாவட்ட குழந்தைகள்நல அலுவலர் சிவக்குமார், தலைமைக் காவலர் ஜெயராஜ், சரஸ்வதி, சாந்தி ஆகியோர் சிறுவனின் தாயார் பிரியாவை இரண்டு நாள்களாக அடைத்துவைத்து மிரட்டி வெள்ளை பேப்பரில் கையொப்பம் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக பிரியா மாவட்ட ஆட்சியரை சந்தித்துபுகார் கொடுத்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து, நீதிமன்ற நடுவர் முன்னிலையில் சிறுவனின் பிரேதப் பரிசோதனை நடைபெற்றுள்ளது.

நீதிமன்ற நடுவரின் விசாரணை அறிக்கை அடிப்படையில் ஜன.12 அன்று கொலை வழக்கு பதிவு செய்து குற்றவாளிகள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொலைவழக்கில்சம்பந்தப்பட்டுள்ள அனைவரையும் கைது செய்வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள கூர்நோக்கு இல்லங்களின் பராமரிப்பு குறித்து உரிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், உளவியல் நிபுணர்கள், மருத்துவர்களை பணியமர்த்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

முன்னதாக, அவர், தாம்பரம் கன்னடப்பாளையம் குட்டை மேடுபகுதியில் வசித்து வரும்சிறுவன் கோகுல்ஸ்ரீயின் தாய் மற்றும் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

 95

# Death of 17-yr-old: NGO wants govt to inspect all homes

EXPRESS NEWS SERVICE
@Madurai

PEOPLE'S Watch, a human rights NGO, asked the Tamil Nadu government to consider the case of Gokul Sri, a juvenile who died at an observation home, as a wake-up call and set up a special committee to inspect all the observation homes across the state on Wednesday.

On addressing the journalists at his office in Chokikulam, People's Watch Executive Director Henri Tiphagne said the state government must see Gokul Sri's case as a wake-up call to stop the harassment endured by juveniles in observation homes, citing that many children have been injured after being tortured in the Chengalpattu district juvenile correction facility. "A special committee should be formed comprising of senior women advocates to inspect all the observation homes in the state," he added.

Henri demanded the state government to provide ₹10 lakh compensation to P Priya, the mother of Gokul Sri, and arrange a government job to help her support her other five children's education.

Quoting Priya's petition to the Chengalpattu district collector, he reiterated the need to take action against District Child Protection Officer Sivakumar, who allegedly threatened and abducted Priya for some days and tried hiding the evidence related to the boy's death. He also accused the department of social defence director S Valarmathi, for delaying the inspection at the Chengalpattu home and for non-submission of the report.

"The National Commission for Protection of Child Rights (NCPCR) shouldn't interfere in the case, as the State Human Rights Commission investigation is underway," he added.

The 17-year-old Gokul Sri from Kannadapalayam in Chengalpattu district was arrested by the Tambaram railway police on December 29 for allegedly stealing a battery. On December 31, he died at the district juvenile correction facility under suspicious circumstances. Recently, six persons, including the superintendent of the home in this connection.

# சிறுவர் சீர்திருத்த பள்ளிகளை ஆய்வு செய்ய ஆணையம் அமைத்திடுக!



மாலை முரசு
சென்னைப் பதிப்பு
18.01.2023

## வைகோ கோரிக்கை!!



சென்னை, ஜன.18

மாநிலம் முழுவதும் உள்ள சிறுவர் சீர்திருத்த பள்ளிகளை கள ஆய்வு செய்திட ஆணையம் அமைத்திட வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தாம்பரம் கன்னடபாளையம் குப்பை மேடு பகுதியில் வசித்து வரும் கணவனை இழந்த கைம்பெண் திருமதி பிரியா. இவருக்கு ஆறு குழந்தைகள் உள்ளனர் உறவுகள் இல்லாத ஆதரவற்ற நிலையில் மூத்த மகன் கோகுல் ஸ்ரீ வயது 17 பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். சொந்த வீடு இல்லாத தாய் குடிநீர் ஏற்றும் லாரிகளை பார்த்துக்கொள்ளும் வாட்ச்மேன் பணி செய்துகொண்டு அங்கேயே வசித்து வருகிறார்.

கணவர் பழனி 2019-ஆம் ஆண்டு இறந்த பின் குடும்ப பாரத்தை தானே சுமந்து மகன் கோகுல் ஸ்ரீ தொடர்ந்து படிக்க வைக்க முடியாத நிலையில் குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள பொம்மை கடையில் வேலைக்கு சேர்த்து உள்ளார்.

இந்த நிலையில் கடந்த 29.12.2022 அன்று நண்பர்களை பார்க்க சென்றுவிட்டு ரெயிலில் தாம்பரம் ரெயில் நிலையம் வந்துள்ளார். அப்போது பணியில் இருந்த ரெயில்வே காவலர்கள் சந்தேகத்தின் பெயரில் பிடித்து விசாரித்து செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த பள்ளிக்கு அனுப்பியுள்ளார்கள்.

31.12.2022 மாலை 5 மணியளவில் கோகுல் ஸ்ரீ தாய் பிரியாவிற்கு செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த பள்ளியில் இருந்து போனில் அழைத்து உன் மகன் பூரி சாப்பிடும் போது வலிப்பு ஏற்பட்டது அதனால் செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனை அழைத்து செல்கிறோம். விரைவில் வரச் சொல்லி உள்ளனர். சற்று நேரத்திற்கு பிறகு அதே நபர் உன் மகனை எமர்ஜென்சி வார்டில் சேர்த்துள்ளோம் என்று சொல்லி உள்ளார். பின்னர் அதே நபர் பத்து நிமிடம் இடைவெளியில் உன் மகன் இறந்து விட்டான் என்று தெரிவித்துள்ளார்.

இரவு 8 மணி அளவில் செங்கல்பட்டு மருத்துவமனை சென்று சிறுவனின் தாய் பிரியா மகனின் உடலை பார்க்க அனுமதிக்காமல் குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலரின் உத்தரவின் பேரில் கட்டாயமாக செங்கல்பட்டில் உள்ள ஒரு வீட்டில் அடைத்து வைத்து அவர் யாரிடமும் பேச விடாமல் செல்போனை பறிமுதல் செய்து வைத்துக்கொண்டனர்.

மறுநாள் 2023 ஜனவரி 1-ஆம் தேதி பகல் ஒரு மணி அளவில் ஆட்டோவில் அழைத்துக்கொண்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனை பிணவறைக்கு கொண்டு சென்று இறந்த நிலையில் இருந்த கோகுல் ஸ்ரீயை காட்டியுள்ளனர். மேல் உதடு இரண்டாக கிழிந்து உடல் முழுவதும் கொடூர காயங்கள் இருந்துள்ளது. என் மகன் வலிப்பு நோயால் இறக்கவில்லை. நீங்கள் சித்திரவதை செய்து அடித்து கொலை செய்துள்ளீர்கள் என்று கண்ணீர் விட்டு கதறி அழுதுள்ளார். பின்னர் அங்கிருந்து அவரை மீண்டும் வலுக்கட்டாயமாக அவர் அடைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டிற்கு கொண்டு சென்று மீண்டும் அவரை வீட்டு காவலில் வைத்து 02.01.23 அன்று சீர்திருத்த பள்ளியின் அதிகாரி ஒருவர் வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து கேட்டு மிரட்டி உள்ளனர். இந்த கொடுமையான சூழலில் சத்தம் போட்டு வீட்டை விட்டு வெளியேறி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவரை நேரில் சந்தித்து விஷயத்தை சொல்லி உள்ளார். அவரும் செங்கல்பட்டு நகர காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 3-ஆம் தேதி செங்கல்பட்டு முதன்மை குற்றவியல் நீதிபதி முன்பு மருத்துவர்கள் சிறுவன் கோகுல் ஸ்ரீ உடலை உடற்கூராய்வு செய்யப்பட்டு பின்னர் மேல் கூராய்வுக்கு கிண்டியில் உள்ள கிங் மருத்துவ இன்ஸ்டிடியூட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இதில் இரண்டு மருத்துவ அறிக்கையிலும் சிறுவன் கோகுல் ஸ்ரீ கொடூரமாக அடித்து சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற அறிக்கை கொடுத்த பின் செங்கல்பட்டு நகர காவல் துறை இதை கொலை வழக்காக மாற்றி லாக்கப் சித்ரவதை கொலையில் சம்பந்தப்பட்ட செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த பள்ளி கண்காணிப்பாளர் மோகன், துணை கண்காணிப்பாளர் நித்தியானந்தம் காவலர்கள் சரண்ராஜ், ஆனந்தராஜ், விஜயகுமார், சந்திரபாபு ஆகிய ஆறு பேரை கைது செய்து சிறையில் அடைத்து உள்ளனர். இதில் பாரபட்சமற்ற நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளை கைது செய்து சிறையில் அடைத்த தமிழக காவல்துறை பணி பாராட்டுக்குரியது.

இந்த வழக்கை சட்டம்-ஒழுங்கு காவல்துறையிலிருந்து சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி அபலைப் பெண் பிரியா சட்டவிரோதமாக அடைத்து வைத்து வெள்ளைத்தாளில் கையெழுத்து கேட்டு மிரட்டியவர்களின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் கணவனை இழந்து ஐந்து பிள்ளைகளுடன் ஆதரவற்ற நிலையில் உள்ள விதவைத் தாய் பிரியாவிற்கு தகுந்த பாதுகாப்பும் அவரின் தகுதிக்கு ஏற்ப அரசு வேலைவாய்ப்பும் நிவாரணமும் வழங்கி வழக்கை விரைந்து விசாரித்து குற்றவாளிக்கு தகுந்த தண்டனை பெற்றுத்தரவும் தமிழ்நாடு முழுவதும் உள்ள சிறுவர் சீர்திருத்த பள்ளிகளை களாய்வு செய்ய ஆணையம் அமைத்து தகுந்த நடவடிக்கை எடுக்கவும் த முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் தலைமையிலான அரசை ம.தி.மு.க. சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு வைகோ கூறியுள்ளார்.

MMK IT WING 97

# கோகுல் ஸ்ரீ மரணம்!

## சிறார்களுக்கான கூர்நோக்கு இல்லங்களின் நிர்வாகம் சீர்திருத்தப்பட வேண்டும்!!

செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள அரசு கூர்நோக்கு மற்றும் சிறப்பு இல்லத்தில் 17 வயது மதிக்கத்தக்க கோகுல் ஸ்ரீ என்ற சிறுவன் சில நாட்களுக்கு முன் சந்தேகத்திற்கிடமான வகையில் மரணித்திருப்பது பெரும் அதிர்ச்சியை அளிக்கின்றது.

பாதிக்கப்பட்ட கோகுல் ஸ்ரீ அவர்களின் குடும்பத்திற்கு உடனடியாக அரசு 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரா. **எம்.எச்.ஜவாஹிருல்லா** எம்.எல்.ஏ.




மனிதநேய மக்கள் கட்சி

**வேண்டுகோள்!**

MMK IT WING

98

தற்போது

#JUSTIN



சிறுவன் மரணம் - வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றுக

## செங்கல்பட்டு சீர்திருத்த பள்ளியில் சிறுவன் கோகுல் ஸ்ரீ கொல்லப்பட்ட வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றுக

மாநிலம் முழுவதும் உள்ள சிறுவர் சீர்திருத்த பள்ளிகளை கள ஆய்வு செய்திட ஆணையம் அமைத்திடுக

- மதிமுக பொதுச்செயலாளர் வைகோ

18|01|2023 - 12:00 PM

www.puthiyathalaimurai.com

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
INDHU TAMIZH THISAI - TAMIL DAILY
சென்னை பதிப்பு (CHENNAI) • MONDAY, JANUARY 23, 2023

## கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கொலையை மறைக்க முயன்ற

# அனைவரையும் கைது செய்ய வேண்டும்

### முதல்வருக்கு கே.பாலகிருஷ்ணன் வலியுறுத்தல்

**தாம்பரம்**

செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் கொலையுண்ட சிறுவன் கோகுல்ஸ்ரீயின் தாயாரை நேற்று சந்தித்த மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: செங்கல்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கோகுல்ஸ்ரீ கடந்த டிச.31 அன்று சித்ரவதை செய்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்த கொலையை மறைக்க கூர்நோக்கு மேலாளர் மற்றும் மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் சிவக்குமார், தலைமைக் காவலர் ஜெயராஜ், சரஸ்வதி, சாந்தி ஆகியோர் சிறுவனின் தாயார் பிரியாவை இரண்டு நாட்களாக அடைத்து வைத்து மிரட்டி வெள்ளை பேப்பரில் கையெழுத்து கேட்டுள்ளனர்.

இக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரையும் கைது செய்வதுடன், சிறுவனின் தாயாரை மிரட்டி பிரேத பரிசோதனையை 2 நாட்களுக்கு மேல் தாமதப்படுத்தி வழக்கை மூடி மறைக்க, திட்டமிட்டு செயல்பட்ட அனைவர் மீதும் வழக்கு பதிவு செய்து கைது செய்ய வேண்டும். குற்றவாளிகள் தப்பி விடாமல் இந்த வழக்கை முறையாக நடத்தி தண்டனைப் பெற்றுத்தர வேண்டும்.

சிறுவனின் குடும்பத்துக்கு ரூ.50 லட்சம் நிவாரணமும், வசிப்பதற்கு அரசு வீடும், அரசு வேலையும், குழந்தைகள் அரசு பள்ளியில் படிப்பதற்கான வசதிகளையும் செய்து தர வேண்டும். அனைத்து கூர்நோக்கு இல்லத்தை முழுமையான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

உரிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், உளவியல் நிபுணர்கள், மருத்துவர்களை பணியமர்த்தி நல்ல சிந்தனையுள்ள இளைஞர்களாக வளர்த்தெடுக்க ஆவண செய்ய வேண்டும். இதுகுறித்து முதல்வர் ஸ்டாலினுக்கு கடிதம் எழுதி உள்ளோம். இவ்வாறு கூறினார்.

பேட்டியின்போது மாவட்டச் செயலாளர்கள் ஆர்.வேல்முருகன் (தென்சென்னை), பாரதி அண்ணா (செங்கல்பட்டு), தாம்பரம் பகுதி செயலாளர் தா.கிருஷ்ணா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

புரட்சிப்பார்வை 100

தமிழ் புலிகளின் குரல்

100

ஆசிரியர்: நாகை.திருவள்ளுவன்

தனிச்சுற்று இணைய இதழ்

தமிழ்: 1 | குரல்: 11 | பக்கம்-1 | திருவள்ளுவர் ஆண்டு 2051 | தை-6 | சனவரி 20-1-2023 வெள்ளிக்கிழமை




## விளிம்பு நிலை சிறுவர்களை குறிவைத்து தாக்கும் அவலம்

# கொலைக்களங்களாக மாறிவரும் சிறார் கூர்நோக்கு இல்லங்கள்

### கூர்நோக்கு இல்லங்கள் ஆய்வு செய்ய வேண்டும் தமிழ்நாடு அரசுக்கு தமிழ்ப்புலிகள்கட்சி வேண்டுகோள்



கடந்த டிசம்பர் மாதம் 29ஆம் தேதி சந்தேகத்தின் பெயரில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட தாம்பரம், கன்னடபாளையம்-குப்பைமேடு பகுதியை சேர்ந்த 17 வயது சிறுவன் கோகுல்ஸ்ரீ, செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்தில் காவல்துறையின் கொடூரமான சித்திரவதையால் மரணம் அடைந்தான். காவல்துறையின் இந்த மனித உரிமை மீறலுக்கான செயலை தமிழ்ப்புலிகள் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

அனைத்து துறைகளிலும் தொழில்நுட்பம் வளர்ந்து நவீனமயமாகி கொண்டிருக்கின்ற வேளையில், குற்றவாளிகளை விசாரிப்பதற்காக இன்னும் ஆங்கிலேயர் காலத்திய நடைமுறைகளை இந்திய காவல்துறை பயன்படுத்துவது அபத்தமான செயல்முறையாகும்.

குற்றவாளிகளையும், குற்றங்களையும் கண்டறிவதற்கு பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப முறைகள் நடைமுறைக்கு வந்துவிட்ட நிலையில் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை Third Degree Treatment என்கிற கொடூரமான சித்திரவதை முறையை காவல்துறை பயன்படுத்துவது மனித உரிமை மீறலாகும்.

சிறுவன் கோகுல்ஸ்ரீ, தாம்பரம் ரயில் நிலையத்தில் ரயில்வே காவலர்களால் திருட்டு வழக்கில் சந்தேகத்தின் பேரில்தான் கைது செய்யப்பட்டு, செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டான். ஆனால் அங்கே இரண்டு நாட்களில் சிறை காவலர்களின் கொடூரமான தாக்குதல்களால் மரணம் அடைந்திருப்பது வேதனைக்குரிய செயலாகும். அதே வேளையில் சிறுவனின் தாயார் பிரியா அவர்களுக்கு முறையான தகவல் கொடுக்கப்படாமலும், சிறுவன் மரணம் அடைந்த பிறகு தனியாக ஒரு வீட்டில் அடைத்து வைக்கப்பட்டு காவலர்களால் மிரட்டப்பட்டு, வெள்ளை காகிதத்தில் கையொப்பமிட வைக்கப்பட்டுள்ளார். மக்கள் கண்காணிப்பகம் போன்ற சமூக நல அமைப்புகளின் முன்முயற்சியால் தான் சிறுவனின் கொலை சம்பவம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

